2018 - இதழ் 02

இலவசம்

# உள்ளான மனிதன்



## GRACE TABERNACLE

APOSTOLIC CHURCH

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2018 - இதழ் 02


## இயேசு சொன்னார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

LOCAL CHURCH CONTACT INFORMATION

நீங்கள் தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

2018 - இதழ் 02


## 4 நீதியின் விருட்சங்கள்

துயரத்தை நீக்கி, மகிழ்ச்சியுள்ள வாழ்வைக் கொடுத்து, ஆனந்தக்களிப்போடு வாழ வைத்து, அவர்களை மனிதர் மத்தியில் தமது மகிமையின் சாட்சியாக நிறுத்துவேன் என்று தேவன் வாக்கு பண்ணினார்.

## 6 நல்ல பொக்கிஷம்

உலகத்தை நேசிக்கின்றவர்கள் உலக ஐசுவரியத்தை தேடி அலைகின்றார்கள். பரலோக பொக்கிஷங்களில் நாட்டமுள்ளவர்கள், பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்பவர்களுடன் நட்பு கொள்ள விரும்புவார்கள்.

## 13 பிரசங்கக் குறிப்புகள்

எனவே உங்களுக்குள்ளே பகைகள் சண்டைகள் வேண்டாம். ஒருவன் கர்த்தருக்குள்ளே சந்தோஷமாக இருப்பதென்றால், சபை ஐக்கியத்திற்கு வரும்போது, யாவரோடும் ஐக்கியமுள்ளவனாயிருப்பான்.

## 15 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிரேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurchnet.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி

15ம் பக்கத்திலிருந்து...

மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்
... மாசி 4, 12, 13, 21, 23
போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி
... மாசி 4, 12 , 13, 19, 20, 21
பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி
... மாசி 13
முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்
... மாசி 14, 17, 23
சமாதானமான வாழ்விற்கு வழி
... மாசி 16, 17, 18, 25 ,26, 28
மனிதர்களை பிரியப்படுத்தும் எண்ணம் வரும் போது
... மாசி 24
என் வாழ்க்கை எப்படிப் போகின்றது
... மாசி 27
தேவனுக்கு பிரியமான சாட்சியுள்ள வாழ்க்கை
... மாசி 1, 2, 6, 8, 9, 10, 15 , 26, 28
பாவங்களை மறைக்கும் எண்ணங்கள் வரும்போது
... மாசி 5, 19, 20
பொறுமையோடு காத்திருங்கள்
... மாசி 2, 11, 21
பழைய வாழ்க்கையை பற்றிய பெருமை வரும்போது
... மாசி 3, 5, 19, 20
ஜெபத்தின் மேன்மை
... மாசி 7
வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை
... மாசி 17, 25
மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...
... மாசி 3, 5, 1

# நீதியின் விருட்சங்கள்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

இயேசுகிறிஸ்து தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்தபோது, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிர வேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி யின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது.

அவர் புஸ்தகத்தை விரித்தபோது: கர்த்தருடைய ஆவியானவர் என்மே லிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்க வும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வை யையும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து உட்கார்ந்தார். ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமா யிருந்தது. அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையதினம் நிறைவேறிற்று என்றார்.

அடிமையாக விலைக்கு கொள்ளப்பட்டவர்களும், அடைமானம் செய்ய ப்பட்ட உடைமைகளும், சொத்துகளும், அநுக்கிரக வருஷத்திலே பண முமின்றி விலையுமின்றி விடுதலை செய்யப்படும்.

**இன்று நாம் தேவனுடைய அநுக்கிரக காலத் திலே வாழ்கின்றோம். தேவன் எமக்கு தருகின்ற விடுதலையானது எமது பிரயாசத்தினால் உண் டாகாமல் அது தேவன் தரும் ஈவாக உள்ளது.**

அவ்விடுதலை யைக் குறித்து தேவனின் ஊழியரான தீர்க்கதரிசி ஏசாயா கூறும்போது,

“சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம் பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார், அவர்கள் கர்த்தர் தம்மு டைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார் கள்.” என்று உரைத்துள்ளார்.

துயரத்தை நீக்கி, மகிழ்ச்சியுள்ள வாழ்வைக் கொடுத்து, ஆனந்தக்க ளிப்போடு வாழ வைத்து, அவர்களை மனிதர் மத்தியில் தமது மகிமை யின் சாட்சியாக நிறுத்துவேன் என்று தேவன் வாக்குபண்ணினார்.

ஆம், அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள். அவர்களின் வாழ்வில் ஏற்படும் மாற்றமானது தேவனை மகிமைப்படுத்துவதாயிருக்கும்.

எந்த மரமும் தனக்கே உரிய கனியைக் கொடுக்கின்றது. நற்கனி மர மானது நற்கனியைக் கொடுப்பதற்கு துன்பப்படுவதில்லை. அது மரத் தின் இயல்பான செயலாயுள்ளது. தேவனாலே மீட்க்கப்பட்டவர்கள் நீதியின் விருட்சங்களாய் எப்போதும் நற்பலனைக் கொடுக்கின்றவர்க ளாய் இருப்பார்கள்.

இயேசுகிறிஸ்து தேவ பிள்ளைகளின் வாழ்வைக் குறித்து பிரசங்கித்த போது "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிரு க்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் (உலகிலுள்ள மற்றவர்கள்) முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." என்று கூறியுள்ளார்.

நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டி க்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் என்று தேவ ஊழியரான பரிசுத்த பவுல் இப்பூமியிலே தேவனுடைய அநாதி திட்டத்தைக் குறித்து கூறும்போது குறிப்பிட்டுள்ளார்.

தேவபிள்ளைகளுக்குரிய தேவ சுபாவத்தை எப்போதும் எவ்விடத்திலும் காண்பிக்கத்தக்கதாய் இடறுதலுக்குரிய எண்ணங்களையும் நினைவுக ளையும் நீக்கிவிடுங்கள்.

மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொ ண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கி றவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

உன்னை நீதியின் விருட்சமாய் இப்பூமியிலே தமது மகிமைக்கென்று நிலைநிறுத்துவது தேவனின் அநாதியான சித்தமாயுள்ளது. இதற்காகவே இயேசு இப்பூமிக்கு வந்தார். இன்று உன் வாழ்வில் விடுதலை வேண்டு மாகில் அவரிடம் கேள். இயேசுவே எனது வாழ்வில் வாரும், என்னை உமது பிள்ளையாய் எற்றுக்கொள்ளும் என்று கூறுவாயாக. உன் சிருஷ்டிகரான அவர் நிச்சயம் உனக்கு விடுதலை தருவார்.


**கிருபையின் கூடார அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# நல்ல பொக்கிஷம்

பண்ணையில், ஆடுகளுக்குரிய தீனியை போட்டுக் கொண்டிருக்கும் போது, ஒரு சில பருந்துகள் உயரத்திலே வட்டம் போட்டுக் கொண்டி ருப்பதை கண்ட பண்ணையாளர், அவை படிப்படியாக தாழ இறங் கு வதை அவதானித்தார். தீவிரமாக பண்ணையில் கோழி கூடு இருந்த பக்கமாக சென்றார். புதிதாக பொரித்த பல குஞ்சுகளுடன், தாய் கோழி, வெளியே இரை கொத்தி திரிவதை கண்டார். உடனடியாக கோழியையும் குஞ்சுகளையும் பாதுகாப்பாக கூட்டிற்குள் அடைத்து விட்டார். கோழிக் குஞ்சுகளை இரையாக கொள்ள அந்த பட்சிகள் அங்கு சேர்ந்தன. அதே போல, "பூக்கள் இருக்கும் இடத்தில் தேனீக் கள் வந்து சேரும்", "அசுத்தங்கள் இருக்கும் இடத்தில் ஈக்கள் வந்து அம ரும்".

"பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" என்று கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து கூறினார். பருந்துகளுக்கும், கழுகுகளுக்கும், தேனீக்களுக்கும், ஈக்களுக்கும் இவைகளை யாரும் சொல்லி கொடு க்கத் தேவையில்லை. இதற்கொத்ததாகவே, இந்த பூமியிலே வாழும் மனிதர்கள், தங்கள் செய்கையினால் மற்றவர்களை கவர்ந்து கொள்கி ன்றார்கள், மற்றவர்களால் கவரப்பட்டும் விடுகின்றார்கள். எங்கு வாழ்ந் தாலும், தேவ பயம் உள்ளவர்கள் தேவனை ஆராதிக்க ஆலயம் ஒன்றை நாடித் தேடிக் கண்டுபிடிக்கின்றார்கள். மதுபான வெறிகொள் பவன், எங்கு பயணம் செய்தாலும், சாராயக் கடை எங்கே இருக்கி றதென்பதை கண்டுகொள்கின்றான்.

தேவனை அன்பு செய்கின்றவர்கள் தங்கள் பொக்கிஷங்களை பரலோ கத்திலே சேர்த்து வைக்கின்றார்கள். உலகத்தை நேசிக்கின்றவர்கள் உலக ஐசுவரியத்தை தேடி அலைகின்றார்கள். பரலோக பொக்கிஷ ங்களில் நாட்டமுள்ளவர்கள், பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்பவர்களுடன் நட்பு கொள்ள விரும்புவார்கள். உலக ஐசுவரியத் தில் நாட்டமுள்ளவர்கள், உலகத்திலுள்ள ஐசுவரியவான்களோடு நட்பு வைக்க, அவர்களோடு பேச, அவர்கள் ஆலோசனையை பெற விரும்பு கின்றார்கள்.

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. அவரு டைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. (சங்கீதம் 34:15). இந்த பூமியிலே வாழும் துன்மார்க்கருடைய கண்கள் எப்போ தும், ஐசுவரியம் உள்ள இடங்களையும், ஐசுவரியத்துடன் வாழும் மனிதர்களையும் நோக்கியிருக்கின்றது.

அப்படியானால் ஐசுவரியவான் நீதிமானாக இருக்க முடியாதா? தேவனுடைய அனுக்கிரகத்தினாலே ஐசுவரியவான்கள் நீதிமான்களாக இருக்க முடியும். ஆனால் இப்படிப்பட்ட நீதிமான்கள், பொருளாசை அற்றவர்கள். உயர்வோ, தாழ்வோ, ஐசுவரியமோ, ஏழ்மையோ இவர்கள் தேவன் மேல் கொண்டுள்ள உறவை பிரிக்கமுடியாது.

யோபு என்னும் பக்தன், மிகுந்த திரவியங்களும் சம்பத்துக்களும் உடையவனாக இருந்தான். அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்க னும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந் தான். (யோபு 1:1) சாத்தானானவன் யோபுவை சோதிக்கும்படி, அனுமதி பெற்று, அவனிடத்திலிருந்து யாவற்றையும் எடுத்துக் கொண்டான். யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். இவையெல்லாவற்றிலும் யோபு பாவ ஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை. (யோபு 1:22). ஏனெனில் அவன் தன்னிடத்தில் இருந்த ஐசுவரியத்திற்காக தேவனை நேசிக்கவில்லை. அவர் தன்னுடைய மீட்பர் என்பதற்காக அவரை நேசித்தான்.

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணும்படி ரோம அதிகாரியிடம் அனுமதி கேட்டான். இவன் இயேசு வுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்தான். யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனாக இருந்தான். இவன் ஐசுவரியவானாக இருந்தும், மனித குலம் மீட்படையும் படி பிதாவாகிய தேவன் நியமித்த ஒழுங்கில் பங்கேற்று கர்த்தரின் சரீரத்தை அடக்கம் செய்தான்.

எனவே தேவனுடைய ஜனங்கள் ஐசுவரியவான்களாக இருப்பதில் தவறில்லை. ஆனால் உலக ஐசுவரியம் பாசிபடிந்த சறுக்கலான நிலம் போன்றது. எனவே உலக ஐசுவரியமுள்ள தேவனுடைய பிள்ளைகள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என வேதாகமத்தில், பல எச்சரிப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றைக் குறித்து சற்று ஆராய் ந்து பார்ப்போம்.

முதலாவதாக, எந்த மனுஷனையும் நியாயந்தீர்ப்பது, அதாவது நீ நரக த்திற்குத்தான் போவாய். நீ ஒன்றுக்கும் உதவாதவன், இப்படியாக மற்றவர்களின் வாழ்க்கையின் முடிவை தீர்மானிப்பது எங்களுடைய வேலை அல்ல. தேவன்தாமே, வேத வாக்கியங்கள் ஊடாகவும், தேவ ஊழி யர் வழியாகவும், சொற்பனங்கள், தீர்க் கதரிசனங்கள் வழியாக வும், மனிதர்களின் தவறான வழிகளைக் குறித்து எச்சரிப்பு வழங்குவது உண்மை. ஆனால் மனிதர்கள் இந்த பூமியில் உயிர் வாழும்வரை, தவ றான வழிகளில் இருந்து மனந்திரும்பும்படியாகவே தேவன் விரும்புகி ன்றார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி! எனவே இந்த விஷயத்தில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருங்கள்.

துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். (எசேக்கியல் 18:23)

துன்மார்க்கரின் அழிவில் பிரியப்படாத எங்கள் தேவன், தம்முடைய பிள்ளைகளின் விழுகையில் எவ்வளவேனும் பிரியப்படமாட்டார். யாவரு க்கும் நியாயத்தீர்ப்பு செய்கின்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி. எனவே காலத்திற்கு முன் எவரையும் நியாய ந்தீர்க்காதிருங்கள். (1 கொரிந்தியர் 4:5) ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடியபொறு மையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3:9)

## பணத்தின் ஆசையும், ஐசுவரியத்தின் மயக்கமும்

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது சிலர் அதை இச்சி த்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங் களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். (1 தீமோத்தேயு 6:10)

மேலும், தேவனுடைய வார்த்தையை பேசும் போது, அந்த வார்ர் த்தையை சில மனிதர்கள் கேட்கின்றார்கள், கேட்கின்றவர்களின் இதய த்திலே அந்த வார்த்தைகள் விதைக்கப்படுகின்றது, ஆனால் உலகக்க வலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடு கிறதினால், இவர்கள் வாழ்க்கை பலனற்றுப் போகின்றது. இந்த மயக் கமானது, பரலோகத்திலுள்ள மேலானவைகளின் மேன்மையை உணர முடியாமல், உலக ஐசுவரியம், மனிதர்களின் மனக் கண்களை குருடுப டுத்திவிடுகின்றது. இவர்கள் முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்ட விதைக்கு சமானமாய் இருக்கின்றார்கள் என பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். (மத்தேயு 13:22)

பண ஆசையானது அல்லது பொருள் ஆசையானது, ஐசுவரியம் உள் ளவர்களுக்கு மட்டுமல்ல, ஐசுவரியம் இல்லாதவர்களுக்கும் அதாவது சராசரி மனிதர்களுக்கும், ஏழைகளுக்கும் இருக்க முடியும். எடுத்துக்கா ட்டாக:

எலிஷா என்னும் தேவனுடைய மனுஷனுக்கு வேலைக்காரனாக இருந்த கேயாசி என்பவன், அந்நிய நாட்டு தளபதியின் வெகுமதிகளை இச்சி த்து, அதை அவனிடம் வாங்கிக் கொண்டான். தேவனோடு வாழ்கின் றதின் மகிமை மறந்து, தன்னை தீட்டுப்படுத்திக் கொண்டான். (2 இரா ஜாக்கள் 5:20-27)

யூதாஸ் என்னும் இயேசுவின் சீஷன், 30 வெள்ளிக் காசுக்காக, தன்னு டைய எஜமானாகிய இயேசுவை காட்டிக் கொடுக்க சம்மதித்தான். (மத்தேயு 26:14-16). மேற்கூறியவர்கள் இருவரும் சராசரி மனிதர்கள்.

சாலமோன் என்னும் ராஜாவை தேவன் ஆசீர்வதித்தார். அவனுக்கு முன்பு இருந்த ராஜாக்களுக்காகிலும் அவனுக்குப்பின் இருக்கும் ராஜாக்களுக்காகிலும் இல்லாத ஐசுவரியத்தையும், சம்பத்தையும் கனத்தையும் தேவன் கொடுத்தார் (2 நாளாகமம் 1:12). அதை சரியான முறையில் ஆண்டு கொள்ளாமல், அந்நிய ஸ்திரிகளிடம் சென்று, அவர்கள் தேவர்களை பின்பற்றி பாவம் செய்தான்.

இயேசுவை சந்திக்க வந்த ஐசுவரியவானாகிய வாலிபன், சிறுவயதிலிருந்து தேவ கற்பனைகளை கைக் கொண்டு வந்தான். அவனுடைய ஐசுவரியத்தை விற்று ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு, தன்னை பின்பற்ற வரும்படி இயேசு அவனுக்கு மகா பெரிதான அழைப்பைக் கொடுத்தார். ஐசுவரியத்தின் மயக்கத்தால் அவன் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல், துக்கத்தோடே திரும்பிப் போனான். (மத்தேயு 19:22)

அனனியா சப்பிராய் என்னும் தம்பதிகள், தங்கள் ஆஸ்திகளை விற்று, தேவனுக்கு காணிக்கை கொண்டு வந்தார்கள். ஆனாலும் அவர்கள் உள்ளத்தில் பொருளாசை இருந்ததால், ஒரு பகுதியை தங்களுக்கென்று பிரித்து வைத்து தேவ சமுகத்திலே பொய் பேசினார்கள். இதனால் தேவனுடைய கோபாக்கினை அவர்கள் மேல் வந்தது. (அப் 5:1-10)

இப்படியாக பண ஆசையும் (பொருளாசை) ஐசுவரியத்தின் மயக்கமும், சன்மார்க்கர், துன்மார்க்கர், மற்றும் சில தேவ பிள்ளைகளையும் பற்றிக் கொள்கின்றது.

ஐசுவரியமுள்ளவர்கள் எங்களிடம் பண ஆசை இல்லை, நாங்கள் ஐசுவரியத்தினால் தேவனுடைய நியமங்களை உணரமுடியாமல் ஆவிக்குரிய மயக்கமடையவில்லை என்று கூறிக், கொள்ளுகின்றார்கள். இந்த கூற்று மனதார உண்மையுள்ளதாக இருந்தால், தேவன் அதில் பிரியப்படுவார். ஆனால் ஐசுவரியத்தை பற்றிக் கொள்வதற்காக இந்த வேத வாக்கியத்தை தங்கள் நிலையை நியாயப்படுத்த பயன்படுத்தினால், தேவன் யாவற்றையும் குறித்த காலத்தில் வெளிச்சத்திற்கு கொண்டு வருவார்.

வறுமையின் காரணம் சோம்பேறித்தனம் என சில ஐசுவரியவான்கள் தங்கள் அபிப்பிராயங்களை கூறிக் கொள்கின்றார்கள். இப்படியான அபிப்பிராயங்கள் இன்று தேவ பிள்ளைகள் மத்தியிலும் ஆங்காங்கே உள்ளிட்டிருப்பதைக் குறித்த செய்திகளை கேள்விப்படுகின்றோம். இப்படிப்பட்டவர்கள் உலக பொருட்களை சேகரிப்பதை மேம்படுத்தி பேசுகின்றார்கள். ஆனால், பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்

-கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்று இயேசு கூறியிருக்கின்றார். (மத்தேயு 6:19-21)

சில மனிதர்கள், தங்கள் சோம்பேறித்தனத்தினால் வறுமையடைகின்றார்கள். சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான் சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும். (நீதி 10:4) சோம்பேறியே, நீ எவ்வளவுநேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்? இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக் கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப்போலவும் வரும். (நீதி 6:9-11) என்று பரிசுத்த வேதாகமத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால், வறுமைக் கோட்டில் வாழும் யாவரும் சோம்பேறித்தனத்தினால் இப்படியான நிலைக்குத் தள்ளப்படவில்லை.

உதாரணமாக, 2004 ஆண்டு, மார்கழி மாதம் 26 திகதி, யாரும் எதிர்பாராத நேரத்திலே பயங்கரமாக சுனாமி தென் ஆசியாவை தாக்கியது. இதனால் மரித்துப் போனவர்கள் அநேகர், இதனால் தங்கள் குடும்பங்களை, வீடுகளை, சொத்துக்களை இழந்தவர்கள் அநேகர். இதே போல இயற்கை அனர்த்தங்களால், யுத்தங்களினால், ஆட்சி மாற்றங்களினால், எதிர்பாராத நோய்களினால் வறுமை நிலைக்கு தள்ளப்படுவோர் அநேகர்.

இன்னும் சில இடங்களிலே துன்மார்க்கமாக வாழ்க்கை வாழும் ஐசுவரியவான்களால் ஜனங்கள் ஒடுக்கப்படுவதுமுண்டு. இப்படிப்பட்ட ஐசுவரியவான்களைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறுவதாவது: ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது. அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது. அறுத்தவர்களுடைய, கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள் கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக்

கொலைசெய்தீர்கள் அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை. இதோ, நியாயாதிபதி (இயேசு) வாசற்படியில் நிற்கிறார். (யாக்கோபு 5:1-6)

வறியவர்கள் குறித்த விடயத்தில், அவர்கள் நிலையைக் குறித்து, விவாதங்களை செய்வதை நிறுத்திவிட்டு, அவர்களின் தற்போதைய நிலையை நியாயந்தீர்க்காமல், உங்களால் கூடுமானவரை அவர்களுக்கு உதவி செய்யுங்கள். ஏழையைப் பரியாசம் பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான். (நீதிமொழிகள் 17:5) பரலோகத்திலிருக்கிற பரம பிதா எங்கள் யாவர்மேலும், இரக்கமுள்ளவராகவும், நீடிய பொறுமையுள்ளவருமா யிருக்கின்றார். மேலும், ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான் அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். (நீதிமொழிகள் 19:17)

நான் நினைத்ததை தொடர்ந்து பற்றிக் கொள்வேன் என்று, சிலர் பல காரணங்களுக்காக உலக பொருட்களை நாடித் தேடுகின்றார்கள். அயராது உழைக்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் உலக ஐசுவரியத்தின் மேல் அதிக வாஞ்சையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட எண்ணங் கொள்ளுகின்றவர்களைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறும் அறிவுரைகளைப் பார்ப்போம்.

- ஐசுவரியவானாகவேண்டுமென்று பிரயாசப்படாதே, சுயபுத்தியைச் சாராதே. இல்லாமற்போகும் பொருள்மேல் உன்கண்களைப் பறக்க விடுவானேன்? அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டு பண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம். (நீதி 23:4-5)

- ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். (1 தீமோத்தேயு 6:10)

இந்த உலகத்திலே, பல இடங்களிலே, ஐசுவரியமுள்ளவர்களை கனத்துடனும், ஏழைகளை கனவீனத்துடனும் நடத்துகின்றார்கள். ஐசுவரியவான்களுக்கு முதலிடத்தை கொடுக்கின்றார்கள், அவர்களுடைய பிள்ளை-களை ஆதரிக்கின்றார்கள். உலக அதிகாரிகளும் அவர்களோடு நட்புள்ளவர்களாக விரும்புகின்றார்கள். இவைகளுக்கு தேவனுடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்டவர்களும் விதிவிலக்கு அல்ல. ராஜாக்களுக்கும், ஐசுவரியவான்களுக்கும் இயேசுவை பற்றி யார் கூறுவார்கள்? எனவே அவர்களை போல ஆகினால்தான் அவர்களுடன் பேசமுடியும் என்று ஆரம்பித்து, சமரசம் செய்து, படிப்படியாக, இழுப்புண்டு போகின்றார்கள். தேவனுடைய மனுஷனாகிய பவுல், ராஜாக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இயேசுவைபற்றி, பகிரங்கமாகச் சொன்னார். அந்த நாட்க

களிலே, அவர் இயேசுவினால் மட்டுமே மனிதர்களுக்கு மீட்பு உண்டு என்ற நற்செய்தியை அறிவித்தபடியால், சிறைக் கைதியாக இருந்தார். அவரை அதிகாரிகளிடத்தில் விசாரணைக்கு கொண்டு வந்த சமயத்தில், அவர் அந்த அதிகாரிகளுக்கு இயேசுவைப் பற்றி கூறினார். எனவே, கர்த்தர் ஆச்சரியமான வழிகளிலே கிரியை செய்கின்றவர். மனிதர்கள் கர்த்தருக்கு வழியை கற்பித்துக் கொடுக்கத் தேவையில்லை.

- இவைகளினாலே தான் இயேசு தம் சீஷர்களுக்கு இவ்வண்ணமாக கூறினார்: ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத்தேயு 19:23-24)

எனவே ஐசுவரியத்தை வாஞ்சித்து, அதைப் பின்தொடர்வதையிட்டு எச்சரிக்கையாயிருங்கள். தேவன் உங்களை ஐசுவரியவான்களாக ஆசீர்வதித்திருக்கின்றார் என்று நீங்கள் நிச்சயமாக உங்கள் உள்ளத்தில் அறிந்திருந்தால் அல்லது உலக ஐசுவரியத்தை சுதந்தரித்திருந்தால், அதை ஏன் தேவன் உங்களிடம் கொடுத்தார் என்பதின் நோக்கத்தை அறிந்து, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுங்கள். பூமியும் அதன் நிறைவும் அதன் குடிகளும் கர்த்தருடையது. (சங்கீதம் 24:1-2)

இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு என்று தேவனுடைய மனுஷனாகிய பவுல் அறிவுரை கூறியிருக்கின்றார்.

எனவே, தேவன் உங்களை அழைத்த அழைப்பை நிறைவேற்றுங்கள். உங்களிடம் எந்த வளங்கள் இருந்தாலும், அவைகளை தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக மட்டும் உபயோகியுங்கள். காலத்திற்கு முன் எவரையும் நியாயந்தீர்க்காதிருங்கள். கர்த்தர் வருகின்றார்!

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக! ஆமேன்.**

# கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்

பிரசங்கக் குறிப்புக்கள் - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

**பிரதான வசனம் :** பிலிப்பியர் 4:4-5

தேவ ஊழியக்காரனாகிய பவுல், தான் எதிர்நோக்கிய துன்பமான சூழ்நிலைகளை குறித்து அவருடைய நிரூபத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். சிலர், மற்றய மனிதர்களின் கவனத்தை அல்லது அனுதாபத்தை பெற்றுக் கொள்ளும் வண்ணமாக, தங்களுக்கு நேரிட்ட துன்பங்களை கூறிக்கொள்வார்கள். எங்கள் சோகக் கதைகளை நினைத்து துக்கித்து, அதை குறித்த அனுதாபத்தைப் பெற்றுக் கொள்வதால் வரும் பிரயோஜனம் அற்பமே. ஆனால் தேவனுடைய ஊழியராகிய பவுல், மற்றவர்களுடைய அனுதாபத்தை அல்லது தயவை பெறும் நோக்கத்தோடே அவ்வண்ணமாக தனக்கு நேரிட்ட நெருக்கங்களை கூறவில்லை. பிலிப்பியா சபைக்கு எழுதும் போது, நான் சிறைப்பட்டிருப்பது, கிறிஸ்துவின் நற்செய்திப் பணிக்காகவே என்பதை, இராயனுடைய அரண்மனையிலுள்ளவர்களும் அறிந்திருக்கின்றார்கள் எனவே என்னுடைய கட்டுக்களைக் குறித்து வெட்கப்படாதிருங்கள் ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் நாமம் அரண்மனையிலும் அறிவிக்கப்பட்டதைக் குறித்து சந்தோஷப்படுகின்றேன் என பிலிப்பியாவிலுள்ளவர்களை திடப்படும்படி எழுதினார். கிறிஸ்துவின் நிமித்தம் தனக்கு வந்த எல்லா உபத்திரவத்திரவங்களிலேயும் அவர் அதை மேன்மையாக எண்ணினார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையின் மத்தியிலே, "**கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்**" என்று பிலிப்பியாவிலுள்ள சபை ஜனங்களுக்கு கூறுகின்றார். சந்தோஷமாய் இருங்கள் என்பதின் பொருள் என்ன? குடும்பமாக சுவையான விருந்து உண்டு, ஸ்தோத்திரப் பாடலைப் பாடுவதா? அல்லது கர்த்தர் செய்த நன்மைகளுக்காக ஒரு நன்றிநவில்தலின் கொண்டாட்டத்தை செய்வதா?

பிலிப்பியா சபையை சேர்ந்த ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட காரணத்திற்காக, அதிகாரிகளினாலும், வேறு ஜனங்களாலும் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். ஆனால் அவர்களோ அந்த உபத்திரவங்களை கண்டு மருளாதிருந்தார்கள். தங்கள் விசுவாசத்திலே உறுதியாய் இருந்தார்கள். ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும்

உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கு உண்டு என்று தேவனுடைய ஊழியராகிய பவுல் கூறி னார்.

இந்த உலகத்திலே தேவனுடைய பிள்ளைகளாகிய எங்களுக்கு பிரச்ச னைகள் உண்டு. அந்த பிரச்சனைகளின் மத்தியிலும் உறுதியுள்ளவர் களாக கர்த்தரை சார்ந்திருக்க வேண்டும். கர்த்தாவே என்று கூப்பிட்டு சுகபோகமான வாழ்வை வாழ்வதற்காக மாத்திரமல்ல, மாறாக கர்த் தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தம் பாடுபடுகிறத ற்கும் எங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. ஆதலால் கிறிஸ்து வுக்குள் உங்களுக்கு யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், உண்டாகும்படிக்கு நீங்கள் ஏக அன்பும் ஏக சிந்தையுள்ளவர்களாயு மிருங்கள். எந்தக் காரியத்தை செய்தாலும் என்ன, அவற்றை வீண் பெருமையினால் செய்யாமல், பிதாவாகிய தேவன் மகிமைப்படும்படி யாய் செய்யுங்கள். ஏனெனில் உலகத்திலிருந்து எங்களுக்கு அநேக பிரச்சனைகள் உண்டு, நாங்கள் கிறிஸ்துவின் நிமித்தம் பாடு அனுபவி க்கின்றது எங்களுக்கு கொடுக்கப்பட்டதாயிருக்கின்றது.

எனவே உங்களுக்குள்ளே பகைகள் சண்டைகள் வேண்டாம். ஒருவன் கர்த்தருக்குள்ளே சந்தோஷமாக இருப்பதென்றால், சபை ஐக்கியத்திற்கு வரும்போது, யாவரோடும் ஐக்கியமுள்ளவனாயிருப்பான். "அவரை என க்கு பிடிக்காது" "இவரோடு எனக்கு சரிவராது" என்ற பேச்சுக்கு அங்கே இடமில்லை. ஒருவன் குழப்பம் செய்கின்றவனாகவே இருந்து மற்றவ ர்களின் தாழ்மையை துஷ்பிரயோகம் செய்பவனாக இருந்தால் அதைக் குறித்து கலக்கமடையாதிருங்கள். இயேசு சொன்னார்: ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்.

ஒருவன் இயேசுவைவிட்டு பின்மாற்றமாக போவானாக இருந்தால், அவன் தேவனுடைய சபையின் சரீரத்திலே துன்பதை விளைவிக்கும் அவயவமாக காணப்படாதபடிக்கு, அவன் உடனடியாக மனம் திரும்ப வேண்டும். நல்லகனி கொடுக்கின்றவனாக தன் வாழ்க்கையை மாற்ற வேண்டும். ஆகையால் நாங்கள் திராட்சை செடியாகிய இயேசுவில் இணைக்கப்பட்டிருப்பவர்களாய் எந்த நிலையிலும் அவருக்குள் சந்தோ ஷமாயிருப்போம்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# நல்ல பங்கை நாடுங்கள்

சொத்துக்களில் தன்னுடைய பங்கை தன் தந்தையிடம் பெற்றுப் கொண்ட இளைய மகன், தூர தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான். பின்பு, அவன் வாழ்வில் நெருக்கம் ஏற்பட்ட போது, தன் தந்தையிடம் இருக்கும் சொத்து அல்ல, தந்தையோடு இருப்பதே நல்ல பங்கு என்று உணர்வடைந்து தந்தை வீட்டிற்கு திரும்பினான். விசுவாசத்தோடு தந்தை வீட்டில் இருந்து வேலை செய்த மூத்தவன், தன் தம்பி வீடு திரும்பிய போது, தந்தை அவனை ஏற்று, அவனுக்கு விருந்து வைத்ததால், சினமடைந்தான். இவ்வளவு காலமும் உம்மோடு இருக்கின்றேனே, எனக்கு இப்படியாக ஒன்றையும் நீர் செய்யவில்லையே என்று முறையிட்டான். மூத்தவனின் மனதும், தந்தையோடு இருப்பதின் பாக்கியத்தை உணராமல், தந்தையிடம் பெறுவதையே மேன்மையாக எண்ணியிருந்தான். ஒரு முறை இயேசு தன்னுடைய நண்பனான லாசரு வீட்டிற்கு சென்றிருந்தார். அங்கே அவனுடைய சகோதரிகளில் மூத்தவளாகிய மார்த்தாள், பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து முறையிட்டாள், ஆனால் இளையவளாகிய மரியாள் கர்த்தருடைய பாதத்தில் இருந்து அவருடைய திருவார்த்தைகளை கேட்க ஆசையாயிருந்தாள். இந்த உலக சொத்துக்கள், சுகபோகமான வாழ்க்கை யாவும் இந்த உலகத்தோடு அழிந்து போகும். எனவே அது நல்ல பங்கு அல்ல. உண்ணும் உணவு, இந்த உடலுக்குரியது. உடல் அழிந்து உயிர் பிரிந்து போகும் போது, அதன் பலன் முடிவு பெறும். எனவே அதுவும் நல்ல பங்கல்ல. எங்கள் ஆத்துமாவை போஷிக்கும் ஞான போஜனமாகிய தேவனுடைய வார்த்தையின் மேல் ஆர்வமாக இருப்பதே நல்ல பங்கு. எப்போதும் எங்கள் எண்ணமும் சிந்தனையும் எங்கள் கர்த்தராகிய இயேசுவை பற்றியதாயிருப்பதே அழியாத நல்ல பங்கு.

**லூக்கா 10:42**

தேவையானது ஒன்றே. மரியாள் தன்னை விட்-டெடுபடாத நல்ல பங்-கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.

ஜெபம்: அன்புள்ள பிதாவே, நீர் எங்களோடு இருப்பதுதான் எங்களை விட்டு எடுபடாத நல்ல பங்கு. அதன் மேன்மையை எப்போதும் உணர்ந்தவனாக (ளாக), இருக்க கிருபை செய்வீராக இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ நியமனங்கள்

பெலிஸ்தியனாகிய கோலியாத் என்னும் இராட்சதனை எதிர்த்து நிற்க, இஸ்ரவேலிலுள்ள எந்த போர்வீரனாலும் முடியாமற்போயிற்று. இளைஞனாகிய தாவீதின் மேல் தேவனுடைய அபிஷேகம் இருந்ததால், அவன் அந்த இராட்சதனை எளிதாக மேற்கொண்டான். அந்த நாளில் இருந்து, இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுல், தாவீதைக் குறித்து எரிச்சல் அடைந்தான். தன்னுடைய ராஜ்ய பாரம் நிலைவரப்படும்படி தன் வாழ்க்கையை தேவனோடு சரி செய்வதற்கு பதிலாக, தேவன் அபிஷேகித்த தாவீதை கொன்று போடும்படி, தீவிரித்தான். சவுல் ராஜாவை கொன்று போடும்படியான சந்தர்ப்பம் தாவீதுக்கு கிடைத்தது. அப்போது அவன், என் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்றும், உமக்கு நான் குற்றம் செய்யவில்லை என்றும் அறிந்து கொள்ளும், தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டவர் மேல் என் கைகளை போடமாட்டேன் என்று தன்னுடைய மனதிலுள்ளவைகளை, ராஜாவிற்கு கொடுக்க வேண்டிய கனத்துடன் கூறினான். பின்பு ஒரு யுத்தத்திலே சவுலும் அவன் குமாரனாகிய யோனத்தானும் மரித்துப் போனார்கள். என்னை கொல்லத் தேடினவன் மாண்டு போனான் என்றும், ராஜ்யம் என் கைக்கு வந்தது என்றும் தாவீது பெருமை கொள்ளாமல், அழுது, புலம்பி தன் ராஜாவுக்காகவும், தன் நண்பனாகிய யோனத்தானுக்காவும் துக்கம் கொண்டாடினான். ஏனெனில், அவர்கள் தன்னுடைய ஜனங்கள், நாங்கள் எல்லோரும் ஒரே தேவனையுடையவர்கள். நாங்கள் ஒருவருக்கு ஒருவர் எதிரிகளாக இருக்கத் தேவையில்லை என்பதை நன்கு அறிந்திருந்தான். தேவன் நியமித்தவர்களை நாங்கள் தள்ளிவிட முயன்றால், அவருடைய சித்தத்திற்கு விரோதமாக செயற்படுகின்றவர்களாயிருப்போம். தேவ நீதி நிறைவேற காத்திருந்தாலும் மற்றவர்களுடைய விழுகையில் மகிழ்ச்சியடையக்கூடாது. இப்படிப்பட்ட உள்ளத்தையே தேவன் விரும்புகின்றார்.

**1 சாமுவேல் 24:12**

என் ஆண்டவன் மேல் என் கையைப் போடேன் அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவராமே என்றேன்.

**ஜெபம்:** மனதுருக்கமுடைய தேவனே, உம்முடைய சித்தத்திற்கும், நேரத்திற்கு எதிராக நான் செயற்படாமலும், மற்றவர்களுடைய விழுகையில் பிரியப்படாமலும் இருக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய நாம மகிமைக்காக...

"உன்னாலே என் பெயருக்கும், எங்கள் குடும்பத்திற்கும் எவ்வளவு அவமானம்" என ஒரு மனிதன் வாலிபப் பிராயத்திலிருக்கும் மகனைப் பார்த்து கூறினார். ஆம்! பிள்ளைகளின் கீழ்ப்படியாமையும் அவர்களின் தான்தோன்றித் தனமான போக்குகளும், பெற்றோருக்கு பெரிதான வேதனையை கொடுக்கும். அதே போன்று சமுதாய ஒன்றியங்களும், தங்கள் அங்கத்தினர்களால் தங்கள் ஒன்றியத்தின் மதிப்பு குறைந்து போகாதபடி, ஒரு அங்கத்தினர் குற்றத்தில் அகப்பட்டால், அவரை ஒழுக்கப்படுத்துவார்கள், சில வேளைகளிலே, தங்களுக்கும் அவருக்கும் தொடர்புகள் இல்லை என்று, அங்கத்துவத்தை ரத்து செய்து, தங்களைத் தூரப்படுத்திக் கொள்வார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் கிறிஸ்தவ ஐக்கியங்களிலும் ஆங்காங்கே நடைபெறுகின்றது. இவைகளின் முதன்மையான நோக்கம் எங்கள் பெயர் மாசுபடக் கூடாது என்பதாகும். குற்றங்கள் நடக்கும் இடத்தில் ஒழுக்க நெறிகள் அவசியமானது. அதிலும் மேன்மையானது, மனந்திரும்புதலும், சீர்பொருந்தப் பண்ணுதலுமாகும். குற்றம் செய்தவர் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு மனந்திரும்ப வேண்டும். மற்றவர்கள் மனந்திரும்பியவரை மறுபடியும் எழுப்பி, கட்டி, நிலைவரப் பண்ண வேண்டும். சற்று சிந்தியுங்கள்! எங்கள் வெளியரங்கமான அல்லது மறைவான கிரியைகளால், சர்வ வல்லமையுள்ளவரும், பரிசுத்தரும், எங்கள் பரலோக தந்தையுமாகிய தேவனின் நாமம் எத்தனை முறை அவமதிக்கப்பட்டிருக்கின்றது? அவர் எங்களை அன்புடன் சிட்சித்து, எங்கள்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கின்றார். எனவே எங்களுடைய ராஜ்யத்திற்காக அல்ல தேவனுடைய ராஜ்யத்தின் வேலைக்காக சேவை செய்வோம்.

**சங்கீதம் 103:10**

அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, நான் உமக்கெதிராக செய்யும் குற்றங்களுக்கு தக்கதாக சரிக்கட்டாமல், அரவணைத்து சிட்சித்து, மீளக் கட்டுகின்றீர். அதே போல நானும் மற்றவர்களை நேசிக்க உணர்வுள்ள இதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவசமாதானம் ஆட்கொள்ளும்

கடந்த மாதம் வெளியாகிய பரீட்சை முடிவுகளை குறித்து இன்னுமாய் துக்கித்துக் கொண்டிருக்கின்றாயா மகனே? என்று தாயார் தன் மகனை தேற்றினார். புயலுக்கு முன்பதாக கார் மேகம் சூழ்வதைப் போல, சில வேளைகளிலே கவலைகள் மனிதர்களுடைய வாழ்க் கையை சூழ்ந்து விடுகின்றது. தங்கள் எதிர்பார்ப்பின்படி வாழ்க்கை யிலே சம்பவங்கள் நடைபெறாமல் போகும் போது மனம் தானாகவே தொய்ந்து விடுகின்றது. வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வியினால் அல்லது பின்ன டைவினால், எதிர்காலத்தை எப்படி முக ங்கொடுக்கப் போகின்றேன் என்ற கவலை மனிதர்களை ஸ்தம்பிதமடைய செய்து விடுகின்றது. இப்படியான வேளைகளில் மனிதர்கள் தங்கள் உடற் சுகங்களைக் கூட பாராமுக மாகவிட்டுவிடுகின்றார்கள். பிழையான முடிவுகளை எடுத்து விடுகின் றார்கள். பரீட்சையில் முடிவுகள் சாதகமாக இல்லை என்பது துக்க த்தை தரலாம், ஆனால் அந்த துக்கத்திலே தரித்திருப்பதால் வாழ்க் கையில் எந்த முன்னேற்றமும் வரப் போவதில்லை. அதே போல ஒரு காரியத்தைக் குறித்து கவலையடைந்து நொந்து கொண்டிருப்பதனால், மன வேதனையும், அதனைத் தற்காலிகமாக மறக்க வைக்கும் தகாத பழக்கங்களும் மனிதர்களுடைய வாழ்க்கையில் உள்ளிட்டுவிடும். பின்பு அவைகளை விட்டு உணர்வடைய பல ஆண்டுகள் எடுக்கும். கர்த்தராகிய இயேசு உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். கவலை வரும் போது அவற்றை விண்ணப்பங்களாக கர்த்தரிடம் சமர்ப்பியுங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் ளாகக் காத்துக் கொள்ளும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது.

**மத்தேயு 6:27**

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, இக்கட்டு நேரத்தில் அடைக்கலமானவரே. கவலையினாலே வாடி, வாழ்க்கையை பாழாக்காதபடிக்கு, அவை யாவையும் உம்பாதத்தில் இறக்கி வைத்து, முன்னேறிச் செல்ல என்னை வழி நடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புதிய சிந்தையை தரித்தவர்கள்

கர்த்தராகிய இயேசு வழியாக பாவ மன்னிப்பை பெற்று, மீட்கப்பட்ட நாளிலே, எங்களுடைய பழைய வாழ்க்கைக்குரிய மோசம் போக்கும் சுபாவங்களை அடக்கம் செய்தோம். அடிமைத்தனமான பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். கிறிஸ் துவை அறிய முன், முற்காலங்களிலே நடப்பித்த, விக்கிரக ஆரா தனை வழிபாடுகளிலிருந்தும், எங்கள் பாவங்களிலிலுமிருந்து விடுதலையா க்கப்பட்டோம். பழையவைகள் எல் லாம் ஒழிந்து போயின. விட்டு வந்த வைகளை கர்த்தர் மறுபடியும் நினைவு கூருகிறவர் அல்ல. அவை களை மன் னித்து விட்டார். ஜீவனுக்கு ஏதுவான புதிய வாழ்வை வாழும்படி துணை செய்கின்றார். அதற்கேற்ப நாங்களும், இனி பழையவைகளை நினைவு கூரலாகாது. அதாவது, நாங்கள் நடப்பித்த அந்நிய கிரியைகளையும், பாவங்களையும், தீட்டான காரிய ங்களையும் மட்டுமல்ல. பிறர் எங்களுக்கு செய்த குற்றங்களையும் நாங்கள் நினைவு கூரலாகாது. பழைய காயங்களை குற்றுயிராக மன தில் வைத்து இரைமீட்காதிருங்கள். அவன் எனக்கு இப்படி துரோகம் செய்தான். அப்படி செய்யும் போது, நாங்கள் "நாய் தான் கக்கி னதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும் பினது என்று சொல்லப்பட்ட மெய்யான் பழமொழியின்படியே" மீண் டும் பழைய வாழ்க்கையின் சுபாவத்திற்கு அடிமைகளாக எங்களை ஒப்புக் கொடுக்கின்றவர்களாக இருப்போம். குற்றுயிராக இருக்கும் அவை, சுகமடைந்து, பெலனடைந்து, எங்களை முற்றாக மேற்கொண் டுவிடும். எங்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள் ளதாக இருக்காதபடி, பழையவைகளை நினைவு கூராமல், புதிதும் ஜீவனுமான வழியிலே மேலான காரியங்களை சிந்தித்துக் கொண்டி ருப்போம்.

**2 பேதுரு 2:22**

எதினால் ஒருவன் ஜெயி க்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமை ப்பட்டிருக்கிறானே.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, உலக மாயைக்குள் அழிந்து போகாதபடி எங்களை மீட்டு, உம்முடைய திவ்விய சுபாவத்திற்கு பங்காளிகளாக மாற்றினீர். நான் மறுபடியும் உலக மாயையை சிந்தியாதபடி வாழ கிருபை செய்யும்இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாசிகளுக்கு மாதிரிகளாக

நாங்கள் உயிர் வாழும் கால கட்டத்திற்கு முன்னதாக வாழ்ந்து சென்ற பரிசுத்தவான்களை வேதத்திலே காண்கின்றோம். அத்தகைய தேவனுடைய மனுஷர்களை எங்கள் வாழ்நாட்களிலும் சந்திக்கக்கூடிய சிலாக்கியத்தை நீங்கள் பெற்றிருக்கலாம். இவர்கள் யாவரும் பல உபத்திரவங்களை சகித்து, தேவனுடைய உத்தம சாட்சிகளாக, முறு முறுப்பில்லாமல் வாழ்ந்து, தேவன் தங்களுக்கு வைத்திருந்த சித்தத்தை நிறைவேற்றினார்கள். இப்படியாக மேகம் போன்ற திரளான சாட்சிகள் எங்களை சூழ நிற்கின்றது. தேவ மனிதனாகிய, பவுல் என்பவரின் காலத்திலே, தெசலோனிக்கேய சபையார், மற்றய பட்டணங்களில் உள்ள விசுவாசிகளுக்கு மாதிரிகளாக எடுத்துக்காட்டான வாழ்கையை வாழ்ந்தார்கள் என வாழ்த்தினார். நாங்கள் அத்தகைய சாட்சிகளை கண்டு, கேட்டு பக்திவிருத்தியடைவதுடன் நிறுத்தி விடாமல், எங்கள் வாழ்க்கை தற்போது உயிரோடிருக்கிற மற்றவர்களுக்கும், கர்த்தரின் வருகை தாமதமானால், நாங்கள் சென்று போன பின்பு வாழ்பவர்களுக்கும் எடுத்துக் காட்டான வாழ்க்கையாக அமைய வேண்டும். எடுத்துக் காட்டான வாழ்க்கை என்பது, உலகமெல்லாம் சென்று சாதனைகள் புரிவதல்ல. எங்களுக்கு கொடுக்கப்பட்ட பிதாவின் சித்தத்தை பொறுமையோடு இறுதிவரைக்கும் பற்றிக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். உயர்வான நேரத்திலும், தாழ்ந்து போக வேண்டிய வேளைகளிலும், நாங்கள் பேசும் வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரியாக வாழவேண்டும். உபதேசத்தை கேட்கின்றவர்களாயும், எங்கள் வாழ்க்கை முறையினால் அவைகளை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துகின்றவர்களாகவும் வாழ வேண்டும்.

**1 தெச 1:7**

இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, என்னை காணும் மற்றய மனிதர்களுக்கு, என் சொல்லும் செயலும், உம்முடைய திவ்விய சுபாவங்களை வெளிப்படுத்துகின்றவனாக (ளாக) வாழ என்னை வழிநடத்தும்.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேண்டுதல் செய்வோம்!

பவுல் என்னும் தேவனுடைய மனுஷன், பல பட்டணங்களிலுள்ள தேவ பிள்ளைகளை நினைக்கும் போதெல்லாம், அவர்களுக்காக, தேவனை நோக்கி விண்ணப்பம் செய்வதிலும், தேவனை ஸ்தோதிரிப்பதிலும் உண்மையுள்ளவராக இருந்தார். அவருடைய தாகம் எல்லாம், அந்த ஜனங்களின் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும், அவர்கள் இடறல் அடையாமல் இயேசு கிறிஸ்துவினால் அவர்களுக்கு உண்டான இரட்சிப்பு நிறைவேற வேண்டும் என்பதாகும். அவர்கள் நிறைவானவர்களும், எப்போதும் நன்மையையே செய்கின்றார்கள் என்பதற்காக அவர் அவர்களுக்காக ஜெபிக்கவில்லை. அவர்கள் குறைவுகள் யாவும் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே ஜெபம் செய்தார். அத்தோடு, அவர் ஜெபம் செய்கின்றார் என்பதற்கு, தேவனே சாட்சியாய் இருக்கின்றார் என்று தைரியமாக கூறுகின்றார். வேதத்திலே காணும் தேவனுக்கு பிரியமான பாத்திரங்கள் யாவும், தேவனுடைய வசனத்தை தியானிப்பதிலும், ஜெபம் செய்வதிலும் (வேண்டுதல், விண்ணப்பம், துதி ஆராதனை) ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்கள். அதே பிரகாரமாக நாங்களும், ஜெபத்திலே தரித்திருக்க வேண்டும். எங்களுக்காக மட்டுமல்ல, மற்றவர்களுக்காக, தேசங்களுக்காக, ஊழியர்களுக்காக, தேவனை அறியாதவர்கள் அறியும்படிக்காக, ஊக்கமாக வேண்டுதல் செய்யவேண்டும். மற்றவர்கள் எங்களுக்கு நன்மை செய்தால் ஜெபிப்பேன் என்று கூறாமல், அவர்களில் நன்மைகள் உருவாகும்படிக்கு எப்போதும் மற்றவர்களுக்காக தேவனை நோக்கி விண்ணப்பித்து நன்றி செலுத்துங்கள்.

**ரோமர் 1:9**

நான் ஜெபம்பண்ணும்போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக்கொண்டிருக்கிறதைக்குறித்துத் தமது குமாரனுடைய சுவிசேஷத்தினாலே என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்குச் சாட்சியாயிருக்கிறார்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள பரலோக பிதாவே, உம்முடைய சமுகத்தில் தரித்திருந்து, மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்து, நன்றியோடு உம்மை துதிக்கும்படியாய், உணர்வுள்ள இருதயத்தைத் தாரும்.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாசமுள்ள சேவை

**மத்தேயு 25:23**

நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

சாமுவேல் என்னும் தேவனுடைய மனுஷன், பால் மறந்த குழந்தைப்பருவத்திலிருந்து தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டார். இஸ்ரவேலிலே நியாயாதிபதியாகவும், தீர்க்கதரிசியாகவும் இருந்தார். அவருக்கு முதிர்வயதானபோது, நானோ கிழவனும் நரைத்தவனுமானேன், நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ் செய்தேன்? யாருக்கு இடுக்கண்செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக்கொண்டு கண்சாடையாயிருந்தேன்? சொல்லுங்கள் அப்படியுண்டானால் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பேன் என்றான். அதற்கு ஜனங்கள்: நீர் எங்களுக்கு அநியாயஞ் செய்யவும் இல்லை. எங்களுக்கு இடுக்கண் செய்யவும் இல்லை. ஒருவர் கையிலும் ஒன்றும் வாங்கவும் இல்லை என்றார்கள். சாமுவேல் தேவனுக்கு முன்பாவும், மனிதர்கள் மத்தியிலும் வாழ்நாளெல்லாம் உண்மையுள்ளவராக இருந்தார். அது மட்டுமல்ல, மனிதர்களுக்கு ஏதாவது அநியாயம் செய்திருந்தால், அதை சரிப்படுத்த, தாழ்மையும், ஆயத்தமுமுள்ளவராக இருந்தார். ஊழியன் என்று கூறும் போது, போதகர்கள், சுவிசேஷகர்கள், போன்ற பிரத்தியோக அழைப்புக்களை மட்டும் சிந்தனையில் கொள்ள வேண்டாம். எங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை, அவை சிறிதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும், உத்தமமும் உண்மையுள்ள ஊழியர்களாக தேவனுக்கு சேவை செய்ய வேண்டும். மனிதர்களுக்கு எதிராக ஏதாவது குற்றங்களை செய்திருந்தால் அவைகளை சீர்ப்படுத்திக் கொள்ளும் மனநிலையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஜெபம்: பரிசுத்த பிதாவே, நீர் எனக்கு தந்த பொறுப்பை இந்த பூமியிலே வாழும்வரை, உண்மையுள்ள மனதுடன், அவற்றை செய்து முடிக்க என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# செம்மையானவர்களின் பாதை

தேவனுடைய நீதி நியாயங்களை கற்று, அதன் வழியில் நடந்து, அதை தங்கள் இருதயத்திலே வைத்து வைக்கின்றவர்கள் உத்தமமான வழியிலே நடக்கின்றார்கள். இவர்கள் பாவத்தை தவிர்த்துக் கொள்வார்கள். பாவமாக தோன்றும் காரியங்ளை விட்டு விலகிக் கொள்வார்கள். பாவத்திற்கு இட்டுச் செல்லும் காரணிகளை அப்புறப்படுத்திக் கொள்வார்கள். பாவமா? பாவமில்லையா? செய்யலாமா? செய்யக்கூடாதா? பக்திவிருத்தியற்ற விதண்டாவாதங்களிலும் இவர்கள் தங்கள் நேரத்தைச் விரயப்படுத்துவதில்லை. நச்சுப் பழங்களை கொடுக்கும் மரத்திலிருக்கும் கனியை பறித்து உண்டால், மனிதர்கள் மரித்துப் போவார்கள். அப்படிப்பட்ட மரத்தின் விதையை பராமரித்து, அதற்கு நீர்பாய்ச்சினால், அந்த விதை வளர்ந்து மரமாகி, அதின் காலத்தில் நச்சுப் பழங்களை கொடுக்கும். அந்த நச்சு பழங்களின் விதைகளை கொண்டு வரும் பறவைகளை தோட்டத்திற்கு வரவிட்டால், அந்த பறவை நச்சு விதைகளை கொண்டு வந்து தோட்டத்தில் போட்டுவிடும். பிரியமானவர்களே, உத்தமர்கள் தேவனுடைய வசனத்தின்படி நடப்பதால், அவருடைய வசனம் கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. இந்தப் பாதையிலே வாழ்பவன், தன் நடையில் கவனமாக இருக்கின்றான் அதனால் அவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவதால், எத்தீங்கும் இவன் ஆத்துமாவை அணுகாதபடி அவர் காத்துக் கொள்கின்றார். தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் மீட்பைக் கொண்டு நீதிமான்களாக மாற்றப்பட்டோம். இயேசு மறுபடியும் வந்து எங்களை சேர்த்துக் கொள்ளும்வரை, அவருடைய செம்மையான வழியிலே நடப்போம்.

**நீதிமொழிகள் 16:17**

தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்குச் சமனான பாதை தன் நடையைக் கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்.

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, உம்முடைய கிருபையினாலே எங்களை மீட்டுக் கொண்டீர். அந்த மீட்பின் வழியில் உத்தமமாய் உம்முடைய திருவசனத்தின்படி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழியாத பொக்கிஷம்

தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனிதன், தினந்தோறும், தேவாலய அலங்கார வாசலில் இருந்து பிச்சை எடுத்து வந்தான். அவன் 40 வயதிற்கு மேற்பட்டவனாக இருந்தான். ஒரு நாள் இயேசுவின் சீஷர்களாகிய பேதுருவும் யோவானும், ஜெபத்திற்கு செல்லும் போது, அவர்களிடம் ஏதாகிலும் கிடைக்கும் என்று எண்ணி பிச்சை கேட்டான். அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன் நசரேயனாகிய **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே** நீ எழுந்து நட என்று சொல்லி அவனை குணமாக்கினான். அவன் குதித்தெழுந்து தேவனைத் துதித்துக் கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். பொன்னும் வெள்ளியும் மிகையாக இருந்தாலும், யார்தான் அவன் முடங்கிப் போன கால்களை நேராக்கி அதற்கு பெலன் கொடுத்து, சப்பாணியாய் இருந்தான் என்பதற்கு எந்த அடையாளமும் இல்லாமல் ஆக்க முடியும்? ஒருவராலும் முடியாது! எனினும், மனிதனுடைய சரீரம் ஊனமுற்றதாகவோ, அல்லது முழுமையானதாகவோ இருக்கலாம், அவை யாவும், ஒருநாள் மண்ணோடு மண்ணாக அழிந்து போகும். ஆனால் **இயேசு** என்னும் நாமம் மட்டுமே, எங்களை ஆத்துமாவை பாவத்திலிருந்து மீட்டு, நித்திய ஜீவனை தருகின்றது. உலக ஐசுவரியம் ஒரு நாள் அழிந்துபோம். பொன்னும் வெள்ளியும் துருப்பிடிக்கும் நாள் வரும். எனவே அவைகளை வாஞ்சித்துத் தேடாமல், பரலோகத்திலே உங்கள் பொக்கிஷமாகிய **இயேசுவை** நாடித் தேடுங்கள்.

**அப்போஸ்தலர் 4:12**

நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய **(இயேசுவின்)** நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்

ஜெபம்: இரட்சிப்பின் தேவனே, அழியாமையை தரித்துக் கொள்ளும்படி அழைத்தீர். அதை மறந்து அழிகின்றவைகள் மேல் நாட்டம் கொள்ளாதபடி காத்துக் கொள்ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்கள் இதயத்தைத் தாழ்த்துங்கள்

இந்த பூமியில் வாழும் மனிதர்கள் தங்கள் அறிவு, உடற்பலம், ஐசுவரியம், அந்தஸ்து போன்றவற்றால் பெருமை அடைகின்றார்கள். பெருமை, அகந்தை, மேட்டிமையான கண்கள் இவை யாவற்றையும் தேவனாகிய கர்த்தர் வெறுக்கின்றார், அது மட்டுமல்ல இப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பி தங்களைத் தாழ்த்தாவிட்டால், அவர்களை தேவன் தாமே அறுப்புண்டு போகப் பண்ணுவார். அசீரியா ராஜாவாகிய சனகெரிப், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஆகியோர், வல்லமைமிக்க ராஜ்யங்களை அரசாண்டார்கள். ஆனால் இவர்கள் தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தாமல், அகந்தை கொண்டார்கள். தேவன் குறித்த காலத்திலே இவர்களை வெட்கமடைந்து தாழ்த்தப்பட்டுப் போகும்படி செய்தார். எனவே அகந்தை உள்ளவர்களை கண்டு எங்கள் இதயங்கள் கலங்கத் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தாது போனால் அவர்கள் கலக்கமடையும் காலம் சமீபித்திருக்கின்றது. ஆனால் பெருமை எங்களுக்குள் இருக்குமாயின் நாங்கள் கலக்கமடைய வேண்டும், ஏனெனில் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார். அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. “அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது. தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார் இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.” என்று மரியாள் அகமகிழ்ந்து பாடினாள்.

**லூக்கா 1:51**

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார் இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.

**ஜெபம்:** தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கும் தேவனே, என் இதயம் பெருமையானவைகளை சிந்தியாமலும், மேட்டிமையான பார்வை என்னில் நிலைகொள்ளாமலும் என்னை காத்தருளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசுவை விசுவாசியுங்கள்

இஸ்ரவேல் ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட மீட்பரின் (மெசியா) வருகைக்காக காத்திருந்தார்கள். இவர்களின் மதத் தலைவர்கள், மெசியா தங்களுக்கு மாத்திரம் தான் எனவும், தாங்கள் போட்டுக் கொண்ட வட்டத்திற்குள் மெசியா இருக்க வேண்டும் என எதிர்பார்த்திருந்தார்கள். மெசியாவாகிய இயேசு கிறிஸ்து இவர்கள் மத்தியிலே வெளிப்பட்டார். அவர் மனத்தாழ்மையும் சாந்தமும் உடையவராக வெளிப்பட்டார். பாவிகளை மீட்கும்படியாக வெளிப்பட்டார். இஸ்ரவேலர் மத்தியிலே அநேக அற்புத அடையாளங்களை இயேசு செய்திருந்தும் அவர்கள் தங்கள் இருதயங்களை கடினப்படுத்தினார்களே அல்லாமல், அவரை விசுவாசிக்கவில்லை. கர்த்தராகிய இயேசு தாமே எங்கள் மத்தியிலும், எங்கள் வாழ்விலும் பல அற்புதங்களை செய்து வருகின்றார். மனதை கடினப்படுத்தாமல், வேத வசனங்களுடன் எங்கள் வாழ்க்கையை அலசி ஆராய்ந்து, தேவ சித்தத்திற்கு எங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்க வேண்டும். எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே மனத்தாழ்மையையும் சாந்தத்தையும் கற்றுத் தந்திருக்கின்றார். இன்று மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை தாங்கள் நினைத்தபடி வாழ்கின்றார்கள். தாங்கள், சரியோ பிழையோ என்று அலசி ஆராய்ந்து பார்க்க இடங்கொடுக்காமல், தங்கள் குடும்பம் முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என எத்தனிக்கின்றார்கள். மேலும் சிலர், சபை ஐக்கியங்களைக் கூட தாங்கள் விரும்பும்படி ஒழுங்குபடுத்த முயல்கின்றார்கள். பிரியமானவர்களே, இயேசு உங்களை அழைக்கும் போது, செவிகொடுங்கள், விசுவாசியுங்கள், அவர் வார்த்தையின்படி வாழுங்கள், அவர் கொடுக்கும் நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**யோவான் 12:37**

அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை.

**ஜெபம்**: எங்களை தேடிவந்த தெய்வமே, என்னுடைய கட்டுப்பாட்டிற்குள் நான் நினைத்தபடி எல்லாம் நடக்கவேண்டும் என்று வாழாமல், உம்மை விசுவாசித்து, உம் சித்தப்படி வாழ உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

சுமக்க முடியாத அடிமைத்தன கட்டுக்களாலும், மனப்பாரங்களாலும் வாடுபவர்கள் பலர். போதைவஸ்து, புகைத்தல், சூதாட்டம், மது பானம், மோக பாவம் போன்றவைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. இவற்றைவிட்டுவிட வேண்டும் என்று அடிமைத்தனத்திற்குட்பட்டவர்கள் பல முயற்ச்சிகளை எடுத்தும், விடுதலையடையமுடியாமல் போய் விடுகின்றார்கள். இப்படிப்பட்ட அடிமைத்தனங்களுடையவர்களுக்கு, தேவனுடைய பிள்ளைகள் ஜெபித்து வருகின்றார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக கிருபையின்மேல் கிருபை பெற்று மனச் சமாதானத்தைக் கெடுக்கும் இக்கட்டுகளில் இருந்து மனிதர்கள் விடுதலையடைகின்றார்கள். இவைகள் மட்டுமல்ல, மனிதர்களை வாட்டும் அடிமைத்தன கட்டுக்களாகிய பெருமை, பொறாமை, வன்மம், பகை, பொருளாசை போன்றவைகளும் மனிதனை கட்டிப் போடுகின்றது. இவை சிலகாலங்களுக்கு இருப்பது தெரியாமல், மனிதர்களின் உள்ளத்தில் இருக்கும். காலப்போக்கில் இவைகளின் விளைவுகள் வெளிப்படும். இவைகளை விட்டு வெளிவர வேண்டும் என்ற எண்ணம் உண்டு, ஆனால் வெளிவரமுடியவில்லை. யார்தான் விடுதலையாக்க முடியும்? பிரியமானவர்களே, எல்லா கட்டுக்களும் இயேசு வழியாக உண்டாகும் கிருபையினால் எங்களை விட்டு அகன்று போகும். நாங்கள் கிருபைக்கு உட்பட்டவர்களாக இருப்பதனால் இந்த மோசம் போக்கும் அடிமைத்தன கட்டுக்கள் எங்களை மேற்கொள்ள முடியாது. உங்கள் வாழ்க்கையில் உள்ள பாரமான சுமைகளை, பெலவீனங்களை இன்றே இயேசுவிடம் ஒப்படைத்து ஜெபியுங்கள். இயேசு வழியாக கிருபை உங்களுக்கு வெளிப்படும்.

**சங்கீதம் 103:4-5**

உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்,

**ஜெபம்:** கிருபையும் இரக்கமும் உள்ள நல்ல ஆண்டவரே, என் உள்ளத்திலிருக்கும் பெலவீனங்களை உம்முடைய பாதத்திலே இறக்கி வைக்கின்றேன், அவைகளை மேற்கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஞானமுள்ள பிள்ளைகள் யார்?

பொதுவாக பிள்ளைகள் வளர்ந்து வரும் போது, தங்கள் சுய விருப்பத்தின்படி, பெற்றோர்களின் அல்லது பெரியவர்களின் நன்மை பயர்க்கும் ஆலோசனைகளை அற்பமாக எண்ணிவிடுகின்றார்கள். உதாரணமாக, சில பிள்ளைகள், குறித்த நேரத்தில் ஆகாரங்ளை உட்கொள்ளாமல், தங்களுடைய விருப்பப்படி விரும்பின நேரத்தில் விரும்பின ஆகாரத்தை மட்டும் உட்கொள்கின்றார்கள். காலங்கள் கடந்து செல்லும் போது, அவற்றின் பின்விளைவுகளை அதாவது சரீர பெலவீனங்கள், நோய்கள் போன்றவை அவர்களை தாக்கும் போது, தங்கள் பிழைகளை உணர்ந்து கொள்கின்றார்கள். அவர்கள் பெற்றோருக்கு இன்னும் பிள்ளைகளாக இருக்கின்ற போதிலும், நல்ல புத்திமதிகளை தள்ளியதின் காரணத்தினால், இப்போது அதன் பின்விளைவுகளை சரிப்படுத்த அதிகம் பிரயாசப்பட வேண்டியுள்ளது. இதே போல எங்கள் பரம பிதா, எங்கள் பரலோக தந்தையாக இருக்கின்றார். எந்த மனிதனும் சமாதானமாக வாழ்வதற்குரிய ஆலோசனை அவரிடமே உண்டு. அவருடைய கிருபையானது, பல வழிகளால் எங்களுக்கு கொடுக்கப்படுகின்றது. அவற்றை அற்பமாக எண்ணும் போது, நாங்களும் பெற்றோருக்கு செவி கொடாத பிள்ளைகளுக்கு ஒத்ததாக வாழ்பவர்களாக இருப்போம். அதாவது வெளியரங்கமான, துணிகரமான பாவங்கள் செய்வதில்லை, ஆனாலும் எங்கள் பரம பிதாவின் சத்தத்திற்கு பூரணமாக செவிகொடுப்பதுமில்லை. அதனால் காலப்போக்கில் அதன் எதிர்மறையான விளைவுகளை கண்டு, பின்பு மனம் வருந்துகிறவர்களாய் வாழாமல், அவருடைய ஆலோசனைகளின்படி வாழுவோம். மதியீனத்தை களைந்துவிட்டு, ஞானமுள்ள பிள்ளைகளாக எங்கள் பரலோக தேவனுக்கு கீழ்ப்படிவோம்.

**நீதிமொழிகள் 12:15**

மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும் ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன்.

**ஜெபம்:** கிருபையுள்ள பரலோக தந்தையே, உம்முடைய போதனைகளை அற்பமாக எண்ணி, மதியீனமாக வாழாமல், அவற்றை என் பாதையின் வெளிச்சமாக கொண்டு, அவ்வழியில் நடக்க உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புத்தி உடையவர்கள்

ஒரு கிராமத்திலே வாழ்ந்த மனிதன் கிணறு ஒன்றை தோண்டினான். அந்த கிணற்றிலிருந்து, தித்திப்பான குடிநீர் சுரப்பதை அறிந்த அவன் மிகவும் சந்தோஷப்பட்டான். அந்த கிணற்றிலிருந்து, அவன் குடும்பம் மட்டுமல்ல, அயலவர்கள், ஏன் முழுக் கிராமமும், தண்ணீர் மொண்டு கொண்டால், யாவருக்கும் தித்திப்பான குடிநீரே கிடைக்கும். இதைப்போலவே, புத்தியுள்ளவன் ஞானத்தை சம்பாதித்திருக்கின்றான். இவன் ஜீவஊற்றாகிய இயேசுவை கண்டடைந்த புத்திமான். தேவனுக்கு பயப்படுகின்ற பயம் அவன் வாழ்வில் இருக்கும். திவ்விய சுபாவங்களால் இவன் வாழ்வு நிறைந்திருக்கும். எனவே நல்ல தண்ணீர் சுரக்கும் ஊற்றுக்களைப் போல இவன் வாழ்வு பரலோக நன்மைகள் நிறைந்ததாக இருக்கும். அத்தோடு, இவன் நல்ல தண்ணீர் உள்ள கிணற்றைப்போல இருப்பதால், இவனோடு இடைப்படுகின்றவர்கள் யாவருக்கும் இவனிடத்திலிருந்து நன்மையே புறம்படும். நன்மையான வார்த்தைகளைப் பேசுவான், நன்மையான கிரியைகளை நடப்பிப்பான், ஜீவ ஊற்றாகிய இயேசுவை தன்னில் வெளிப்படுத்துகின்றான். ஆனால் மதியீனன், எவ்வளவு கற்றுக் கொண்டாலும், இந்த உலகத்தில் ஞானம் என்று பெயர்பெற்றிருக்கும், உலக அறிவை சம்பாதித்தாலும், இவன் த்தான் எங்கிருந்து வந்தவன், எங்கு போகின்றேன் என்பதை அறியான். நிலையான நன்மையின் இருப்பிடமாகிய இயேசுவை அறியான். இவன் உப்புத் தண்ணீர் சுரக்கும் ஊற்றுக்களை உடையவன். உவர் தண்ணீர் உள்ள கிணற்றில் மொண்டு கொள்பவர்களைப் போல, இவனிடமிருந்து மதியீனமே புறப்படும். பிரியமானவர்களே, புத்தியுள்ள மனிதனைப் போல ஜீவஊற்றாகிய இயேசுவை பற்றிக் கொண்டு, அவரைப் பின் தொடருவோம்.

**நீதிமொழிகள் 16:22**

புத்தி தன்னை உடையவர்களுக்கு ஜீவஊற்று மதியீனரின் போதனை மதியீனமே.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள பிதாவே, இந்த உலக போக்கை பின்பற்றுகின்றவர்களுக்கு செவிகொடுக்காமல், உம்முடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும் புத்திமானாக வாழ கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் அடிச்சுவடுகள்



கடையிலே இருப்பதில் சிறந்ததும் அதிநவீனமுமான உடற்பயிற்ச்சி சாதனம் ஒன்றை ஒரு மனிதன் கொள்வனவு செய்தான். அந்த சாதனத்துடன் கொடுக்கப்பட்ட கைநூல் மற்றும் ஒளிப்பதிவு பேட்டை போன்றவற்றிலிருந்து அந்த உடற்பயிற்ச்சி சாதனத்தை பற்றி கற்றுக் கொண்டான். ஆனால் உடற்பயிற்ச்சி செய்வதற்கு அவனுக்கு நேர மில்லை. உடற்பயிற்ச்சி சாதனம் ஒரு காட்சிப் பொருளைப் போல அவன் வீட்டிலே இருந்தது. அதைப்பற்றிய அறிவினால் அவனுக்கு வந்த நன்மை அற்பமே. பிரியமானவர்களே, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று இயேசு கூறியிருக்கின்றார். வெறுமனே மதச்சடங்குகளை மட்டும் நிறைவேற்றுவதே இயேசுவை பின்பற்றுவது என்று பொருள் அல்ல. ஒருவன் உடற்பயிற்ச்சியை செய்யும் எண்ணம் கொண்டு, ஒரு சரியான சாதனத்தை கொள்வனவு செய்தது அவன் தன் ஆரோக்கிய நிலையை நோக்கிய முதல்அடி. அது நல்ல முடிவு! அதேபோல வேதாகமத்தை வாங்கி வீட்டில் வைத்திருப்பது, மாத்திரமல்ல அதை வாசிப்பதும் இன்றியமையாதது. ஆனால் அதனுடன் நின்றுவிடாதிருங்கள். அந்த வார்த்தைகளின்படி எங்கள் வாழ்வு, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றுகின்றதாயிருக்க வேண்டும். கிறிஸ்துவை பின்பற்றுவது என்பது, ஒரு கூட்ட ஜனங்கள் அவருக்கு பின் செல்கின்றார்கள், எனவே நானும் அவர்களோடு நடந்து போவேன் என்பதல்ல. இயேசு காண்பித்த வாழ்க்கையின் மாதிரியின்படி பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்களாக வாழ வேண்டும்.

**1 பேதுரு 2:21**

இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள் ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.

**ஜெபம்:** உன்னதமான தேவனே, "நான்" என்னும் எண்ணம் என்னில் சிறுகவும் "நீர்" என்னில் பெருகவும், அதை மற்றவர்கள் என்னில் காணத்தக்கதாக வாழும்படி என்னை வழிநடத்தும்.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வழிகளும் அதன் முடிவுகளும்

இந்த **உலக கணிப்பின்படி**, துன்மார்க்கர், சன்மார்க்கர், மதப் பற்றுள்ளோர், மதப் பற்றற்றோர் என்று மனிதர்களின் வழிகளை வகையறுத்துப் பார்ப்போமென்றால், துன்மார்க்கர், அதாவது தீயவழியில் செல்பவர்களிலும்; தங்கள் மதச் சடங்காச்சாரங்களை நிறை வேற்றுபவர்களும், கடவுள் இல்லை என்ற மதியற்றவர்களும் உள்ளடங்குவார். சன்மார்க்கமான வழியில் அதாவது நல்வழியில் செல்பவர்களிலும் மதப் பற்றுள்ளவர்களும், மதியீனமாக வாழும் கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் இருக்கின்றார்கள். இந்தக் குழுக்களில் உள்ளவர்கள் உலகத்திலே கல்விமான்களாக இருக்கலாம், அல்லது கல்வி அறிவு குறைந்தவர்களாக இருக்கலாம். ஐசுவரியவான்களாக இருக்கலாம், அல்லது ஐசுவரியம் குறைவுள்ளவர்களாக இருக்கலாம். இவர்கள் யாவருக்கும் தங்கள் வழிகள் சீரானதாகவே காணப்படுகின்றது. தன் பார்வைக்கு நீதிமானாக வாழ்ந்த மதப்பற்றுள்ள மனிதன், ஒரு சமயம் ஜெபிக்க சென்றான். தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என் சம்பாத்தியத்திலெல்லாம் தசம பாகம் செலுத்தி வருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். இவன் மதப்பற்றுள்ளவனாக, வெளியரங்கமாக கிரித்தியங்களை நடப்பிப்பதால், தன்னை மேன்மையானவனாக எண்ணிக் கொண்டான். ஆனால் இவனுடைய உள்ளான மனுஷனில் தேவன் விரும்பும் அன்பும் தாழ்மையும் இருக்கவில்லை. இப்படிப்பட்ட வழியின் முடிவிலும் அழிவுதான் உண்டு. நித்திய வாழ்வை கொடுக்கும் ஒரே வழி இயேசு கிறிஸ்து. அந்த வழியை பின்பற்றி, மனதார அவர் கற்பனைகளை கைகொள்கின்றவர்களின் முடிவோ பரலோகத்தில் நித்திய வாழ்வு.

**நீதிமொழிகள் 16:25**

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு அதின் முடிவோ மரணவழிகள்.

**ஜெபம்**: இரட்சிப்பின் தேவனே, உலகத்திலே நன்மையாய் தோன்றுகின்ற வழிகளில் சென்று என் வாழ்வை மாய்த்துக் கொள்ளாமல், நித்திய வாழ்வைக் கொடுக்கும் இயேசுவை, பின்பற்றி நடக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழியாத ஆத்தும போஜனம்

மனிதர்களுடைய பிரயாசங்கள் யாவற்றிற்கும் அதன் முடிவில் பலன் அல்லது விளைவு உண்டு. தன் வயிற்றின் பசியை நிறைக்க உழைக்கின்றவன், தன் வயிற்றை நிறைத்துக் கொள்கின்றான். இது சரீரத்திற்குரிய போஜனம். ஆத்துமாவை திருப்தியாக்கும் போஜனத்தை வாஞ்சிக்கின்றவன் அதை இயேசுவினிடத்திலே கண்டடைகின்றான். ஒரு சமயம், திரளான ஜனங்கள் இயேசுவினிடத்தில் வந்தார்கள். இந்த உலக ஐசுவரியத்தினால் பெற்றுக் கொள்ளமுடியாத ஆத்துமாவின் போஜனத்தை அவர்களுக்கு கொடுத்தார். அதை அவர்கள் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். நேரம் கடந்து சென்றபடியால், அவர்களை பசியுடன் வீட்டிற்கு அனுப்ப விரும்பாமல், அதிசயிக்கத்தக்க விதமாக பல்லாயிரம் பேருக்கும் அப்பமும் பொரித்த மீன்களையும் பலுகப்பண்ணி, யாவரும் உண்டு திருப்தியாகும்படியாக அவர்கள் வயிற்றையும் போஷித்தார். ஆனால் மனிதர்களோ, ஞான போஜனமாகிய ஆத்தும போஜனத்தை அற்பமாக எடுத்து, அப்பம் தின்று திருப்தியாகிய படியால் இயேசுவுக்கு பின்சென்றார்கள். அதை இயேசு அவர்களுக்கு சுட்டிக் காட்டிய போது, ஞான போஜனத்தில் மனதில்லாமல், அதிகபடியானோர் பின்வாங்கிப் போனார்கள். இதே போன்று எங்கள் ஐக்கியங்களின் நோக்கமும் ஞான போஜனத்தை மையமாக கொண்டதாக இருக்க வேண்டும். எங்கள் ஆத்துமா ஜீவன் உள்ள தேவன் மேலே தாகமாக இருக்க வேண்டும். இயேசுவே ஜீவ உணவாகவும், ஆத்தும தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீராகவும் இருக்கின்றார். நாங்கள் வாஞ்சிப்பதை நாங்கள் பெற்றுக் கொள்ளுவோம். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். எனவே எங்கள் ஆத்துமா எங்கள் மீட்பராகிய இயேசுவை வாஞ்சிக்கட்டும்.

**சங்கீதம் 42:2**

என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது.

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, அழியாததும் நித்திய ஜீவனை கொடுக்கின்றதுமாகிய ஞான போஜனத்தை வாஞ்சித்து அதைப் பின்தொடர்ந்து, அதனாலே என் ஆத்துமா திருப்தியாவதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புதிதும் தூய்மையுள்ளவைகளும்

“என்ன, இந்த சின்ன விஷயத்தை பெரிசுபடுத்தி பேசுகின்றீர்கள்?” என்று தன் தாயாரை நோக்கி ஒரு வாலிபன் கோபத்துடன் கூறினான். மகனே, சின்ன விஷப்பாம்பு கடித்துவிட்டது என்று அதை அற்பமாக எண்ண முடியுமா? ஒரு துளி விஷம் எப்படி முழுக் குருதித் தொகுதியை பாதித்துவிடுகின்றது. அதைப் போலவே எங்களில் இருக்கும் மிகச் சிறிய பழக்கங்கள் எங்கள் குணாதிசயத்தையே முற்றிலும் மாற்றிவிடும் என்று தாயார் தயவாகக் கூறினார். பிரியமானவர்களே, நாட்பட்ட பழைய கதைகளை விட்டு விடுங்கள். அதிகமானவற்றை விட்டுவிட்டாலும், ஒரு சில சம்பவங்களை மறக்க முடியவில்லை என சிலர் கூறிக் கொள்வார்கள். அந்த விடமுடியாத பழைய சம்பவம், மனதின் அடியாழத்தில் இருக்கும், அவற்றை மீளாய்வு செய்யும் போது, அந்த சம்பவம் எங்கள் உணர்வலைகளை மறுபடியும் தூண்டிவிடும். தூய்மையாக்கப் பட்ட மனதை அது மறுபடியும் கறைப்படுத்திவிடும். ஒருவன் தன் வீட்டை நன்றாக கழுவிய போதும், ஒரு சிறு பகுதியில் ஒரு கொஞ்சச் சேறு இருந்தது, அதை விட்டுவிட்டு சென்றால் என்ன நடக்கும்? அதை மிதித்து நடப்பவர்கள், மறுபடியும் அந்த வீட்டை அசுத்தப் படுத்தி விடுவார்கள். கொஞ்சம் புளித்த மா, பிசைந்த மா முழுவதையும் உப்பப்பண்ணும் என்று பொதுவாக கூறாமல், இன்றைய சிந்தையின் போது, உள்ளத்திலுள்ள கொஞ்சப் பழைய கறைகள், தூய்மைப்பட்டிருக்கும் உள்ளத்தை முற்றிலும் ஆண்டு கொள்ளும் என்பதைக் குறித்து சிந்தித்து, அவற்றை விட்டுவிட தீர்மானியுங்கள். பழைய கசப்பான சம்பவங்களோடு சம்பந்தப்பட்டிருப் பவர்களை, தினமும் உங்கள் ஜெப வேளையிலே இயேசுவின் நாமத்தில் ஆசீர்வதியுங்கள். அந்தக் கசப்புக்கள் நாளடைவில் பெலனற்றுப்போய்விடும்.

**கலாத்தியர் 6:2**

புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்.

**ஜெபம்:** என்னை அழிவில் இருந்து மீட்ட தேவனே, என் மனதில் இருக்கும் பழைய கறையை முற்றிலும் அகற்றிவிட தீர்மானிக்கின்றேன். உம்முடைய தூய ஆவியானவர் வழியாக என்னை வழிநடத்தும் இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தந்திரமான கண்ணி

சில வேளைகளிலே, எங்களோடு கூட ஒன்றாய் தேவனை ஆராதித்து வந்தவர்கள், எதிர்பாராத விதமாக பாதகத்தை செய்து விடுகின்றார்கள். சில குற்றங்கள், ஒரு தனி மனிதனை மட்டுமல்ல, முழு சபை ஐக்கியத்தையும் பாதித்து, அநேகருடைய உள்ளத்திலே பெரும் வியாகுலத்தை உண்டு பண்ணி, சில வேளைகளிலே, சமுதாயத்தின் மத்தியிலும் அவப் பெயரை உண்டாக்கிவிடுகின்றது. இப்படியாக துக்கம் உண்டாக்கினவர்களை, மனிதர்களில் பலர் ஒதுக்கி விடுகின்றார்கள். அப்படிப்பட்ட தண்டனை பெரிய தண்டனையாக உள்ளது. இதற்கொத்த சம்பவம், கொரிந்து பட்டணத்திலுள்ள சபையிலே நடைபெற்றது. அங்குள்ள மனிதன் ஒருவன் சபையார் யாவருக்கும் மிகுந்த துக்கம் உண்டாக்கும் செயல் ஒன்றை செய்திருப்பதாக தேவனுடைய மனுஷனாகிய பவுல் குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் அவர் கூறுகையில், துக்கமுண்டாக்கினவன் எனக்குமாத்திரமல்ல, ஒருவாறு உங்களெல்லாருக்கும் துக்கமுண்டாக்கினான், அப்படிப்பட்டவனுக்கு அநேகராலுண்டான இந்த தண்டனையே போதும். ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடிக்கு, நீங்கள் அவனுக்கு மன்னித்து, அன்பை காட்டி ஆறுதல்செய்ய வேண்டும் என்றார். குற்றத்தை செய்த மனிதன் அதிக துக்கத்திலே இருப்பதனால், அவன் உள்ளத்திலே '**மனந்திரும்புதல்**' உண்டாயிருக்கிறது. அவன் அடைந்த துக்கமும் அவமானமும் அவனுக்கு போதுமான தண்டனை. எனவே நாங்களும், சாத்தானின் திருக்குத்தனமான பெருமை, கீழ்ப்படியாமை, கசப்பு, பிரிவினை ஆகிய சுபாவங்களுக்கு எங்கள் உள்ளத்தை உறைவிடமாக்கிக் கொள்ளாமல், ஆத்துமாக்கள் அழிந்து மாண்டு போகாதபடிக்கு எங்களிலுள்ள கிறிஸ்துவின் அன்பை வெளிக்காட்டுவோம்.

**கொரிந்தியர் 2:11**

சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன் அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, குற்றம் செய்து உடைந்து போயிருக்கும் வேளையிலே நீர் எங்களைத் தேற்றினீர். அதுபோல உம்முடைய அன்பை, மிகக் கடினமான சூழ்நிலையிலும் காண்பிக்க என்னை உணர்வுள்ளவனாக்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என் மீட்பரை தரிசிக்கும் நாள் வரை

ஆண்டுகள் கடந்து சென்று வயதாகும் போது, விதிவிலக்கின்றி எல்லோரும் வெளிவேலைகள், வீட்டு வேலைகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ளும் காலங்கள் வரும். இத்தகைய வயதெல்லையுடையவர்கள் தங்கள் வாழ்க்கையில் பொழுதுபோக்காக, வீட்டுத் தோட்டங்கள், புத்தகவாசிப்பு, தையல், இன்ரநெற் ஊடகங்கள், வானொலி, தொலைக் காட்சி, சமூக ஒன்றுகூடல், உல்லாசப் பயணங்கள், போன்ற பொழுது போக் குகளால் நேரத்தைப் போக்கிக் கொள் கின்றார்கள். இதை செய்யலாமா? செய் யக்கூடாதா என்று ஒவ்வொரு சந்தர்ப் பங்களிலும் கேள்விகளைக் கேட்காமல், **“நான் இதுவரை வாழ்ந்த நல்ல வாழ்க்கையை கிறிஸ்துவுக்குள் காத் துக் கொள்ளவேண்டும்”** என்ற எண்ணம் எப்போதும் இருக்க வேண் டும். எங்கள் ஓய்வுநேர பொழுது போக்குகளால் உள்ளான மனிதனை மாசுபடுத்தும், காட்சிகள், பேச்சுக்கள், வாசிப்புக்கள், செய்கைகளை, சிந்தைகளை தவிர்த்துக் கொள்ளவேண்டும். சரீரம் பெலனற்றுப் போகும் போது, இந்த உலகத்திற்கொத்த காரியங்களில் ஈடுபடும் போது, நீங்கள் அநேக வருடங்களுக்கு முன் விட்டுவிட்ட கசப்புக்கள் யாவும் உயிர்பெற்று எழும்பிவிடும். அன்னாள் என்னும் தீர்க்கதரிசி, தன் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் 7 வருஷம் புருஷனு டனே வாழ்ந்தவளும், ஏறக்குறைய 84 ´வயதுள்ளவளுமான அந்த விதவை, எருசலேம் தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள். அந்நாளிலே எருசலேம் தேவாலயத்திலே இயேசு என்னும் ஒரு குழந்தையை அநேகர் கண்டார்கள். இந்த வயதான விதவையும், சிமியோன் என்னும் வயதான மனிதனும், உலகத்தின் மீட்பர் இயேசு என்பதை கண்டு கொண்டார்கள். எனவே, நாங்களும் எங்கள் மீட்பராகிய இயேசுவை முகமுகமாய் தரிசிக்கும் நாள்வரைக்கும் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வோம்.

**லூக்கா 2:38**

கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாக காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்.

ஜெபம்: கிருபையுள்ள நல்ல ஆண்டவரே, என் சரீரத்தில் பெலன் குன்றி முதிர்வயதின் நாட்கள் வந்தாலும் , எப்போதும் உம்மிலே களிகூருகின்ற வாழ்க்கையை காத்துக் கொள்ள கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நலமானதைப் பற்றிக் கொள்வோம்

பெரும் போகத்திற்கு ஆயத்தப்படும் விவசாயி ஒருவன், வேலையை சுலபமாக்குவதற்காக ஒரு நவீன இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்தான். நாட்கள் கடந்து சென்ற பின்பு, அதை அவனுக்கு விற்ற இன்னுமொரு பண்ணை முதலாளி, தன்னை ஏமாற்றிவிட்டான் என் பதை உணர்ந்து கொண்டான். இதற்கொத்ததாகவே சிலர் எங்கள் வாழ்வின் நன்மையை கருதுவதுபோல வஞ்சகமான பேச்சுக்களை பேசி, தீமைகளை எங்கள் வாழ்க்கையில் வரப்பண்ணுகின்றார்கள். ஆதியிலே, சாத்தானானவன், ஏவாளை வஞ்சித்து பாவம் செய்ய தூண்டிய போது, தன்னைபற்றி நலம் எதையும் அவன் பேசவில்லை. இதை நீ செய்தால் உனக்குத்தான் நன்மை என ஏவாளைக் குறித்தே கரிசனையுள்ளவன் போல பேசினான். அன்றுமட்டுமல்ல இன்றும் அவ்வண்ணமாகவே செயற்படுகின்றான். ஆனால் தேவனோ, ஆசீர்வாதத்தையும், சாபத்தையும், வாழ்வையும், சாவையும் உனக்கு முன்பாக வைக்கின்றேன். நீ ஆசீர்வாதத்தையும் வாழ்வையும் தெரிந்து கொள்ளும்படியே விரும்புகின்றேன் என கூறுகின்றார். எனவே தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிந்து ஆசீர்வாதத்தையும் வாழ்வையும் இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். தீமை என்றும், தீமைக்கு வழி வகுக்கும் என்றும் பரிசுத்த வேதாகமம் திட்டமாக கூறும் விடயங்களை ஆரா ய்ச்சி செய்யப் போகாதிருங்கள். தேவன் தீமை என்று எச்சரித்த காரி யங்களை, வஞ்சகமாக உங்கள் வாழ்வில் நுழையப் பண்ணுகின்ற வர்களைக் குறித்தும் அவர்கள் ஆலோசனைகளைக் குறித்தும் எச்சரி க்கையாயிருங்கள். அவர்கள் கூறும் வழிகளையும் விட்டு உடனடியாக விலகிவிடுங்கள். அவ்வழிகள் உங்களை நயங்காட்டி. முடிவிலே குழியிலே விழப் பண்ணும். அவ்வழிகளை வேத வாக்கியங்க ளோடு சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

**நீதிமொழிகள் 16:29**

கொடுமையானவன் தன் அயலானுக்கு நயங்கா ட்டி, அவனை நலமல் லாத வழியிலே நடக்க ப்பண்ணுகிறான்

**ஜெபம்:** உண்மையும் நீதியுமுள்ள தேவனே, கொடுமையானவர்கள் வீசும் வஞ்சக வலைக்குள் சிக்கிவிடாதபடி, அவைகளின் பக்கம் என் தலையை சாய்க்காதபடிக்கும், உம்முடைய நலமான வழியில் நடக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# காருண்யம் என்னும் கேடகம்

படுக்கைக்கு சென்றால் தூக்கம் வரவில்லை! ஒரே மனக்குழப்பம், நடந்த சம்பவத்தை மறக்க முடியவில்லை. யாரிடம் போய் இதை கூற முடியும். இந்த இரவு ஆயிரம் வருடங்கள் போல இருக்கின்றது. இந்த இரவு சென்று எப்போது விடியல் வரும்? என்று ஏக்கத்துடன் ஒரு தாயார் மனதிலே துக்கித்துக் கொண்டிருந்தார். பிரியமான வர்களே, இப்படியான சூழ்நிலைகளை கடக்க வேண்டிய நாட்கள் எங்கள் யாவரின் வாழ்க்கையிலும் உண்டு. சில நாட்கள் மற்றய நாட்களை விட நீண் டதாக காணப்படும். சூறாவளி அடிப் பது போல எப்பக்கமும் திரும்ப முடி யாத நிலை, வாழ்க்கைப் படகு மூழ் கிப் போய்விடுமோ என்ற ஏக்கம் ஏற் படுகின்றது. கர்த்தராகிய இயேசு, எங் கள் பாவங்களுக்காக மரிக்கும்படி காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, அவர் தனித்திருந்தார், அவருடைய மனம் வியாகுலப்பட்டதால், பிதாவாகிய தேவனோடு பேசினார் (ஜெபித்தார்) அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அதே போலவே, எங்கள் இக்கட்டான சூழ்நிலைகளில் தேவனுடைய காருண்யம் என்னும் கேடகம், எங்களை அறியாமலே, எங்களை சூழ்ந்து கொள்கின்றது. பரிசுத்தராகிய இயேசு, தான் எதிர்நோக்க வேண்டிய நிந்தையை அல்ல, சூழ்ந்து நிற்கும் பகைஞரை அல்ல, அன்பு செய்கின்ற பிதாவாகிய தேவனை நோக்கிப் பார்த்தார். அதே போல நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிடும் யாவருக்கும் அவர் ஆதரவாக இருந்து விண்ணப்பங்களை கேட்டு அதற்கு பதிலளிக்கின்றார். எனவே, அவசரத்தில் செயற்படாமல், அவரையே நம்பி பொறுமையோடு விடியலுக்காக காத்திருப்போம். எங்களை நேசிக்கின்ற தேவன், எங்களை கைவிடமாட்டார்.

**சங்கீதம் 5:12**

கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்வீர்.

**ஜெபம்**: இரக்கமுள்ள தகப்பனே, சூழ்நிலைகள் என்னை கலங்கப் பண்ணின போதும் உம்முடைய காருண்யம் எனக்கு கேடகமாயிருந்து காத்துவருகின்றது. தொடர்ந்து உம்மை நோக்கி பார்த்து ஜெயம் எடுக்க என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

இயேசுவின் பாடுகளின் நோக்கம் உங்களில் நிறைவேற இடங் கொடுங்கள்

# பரலோக எஜமானன் இயேசு

நான் ஒரு கிறிஸ்தவன் ஆனால் இந்த ஸ்தாபனத்தின் மேற்பார்வை யாளர் ஆகவே மேற்பார்வையாளராக நான் செய்ய கடைப்பாடுகள் உண்டு, அவைகளையும் நான் நிறைவேற்ற வேண்டும் என ஒரு மனிதன் கூறினான். இந்த கூற்றில் ஓரளவு உண்மை உண்டு. ஆனால் எந்த ஒரு கிறிஸ்தவனும் இரட்டை வேடம் போட முடியாது. அதாவது நான் ஆலயத்திலே தேவ நியமங்களின்படி நடப்பேன், அங்கே என் எஜமானன் கர்த்தராகிய இயேசு. ஆனால் என்னுடைய வேலைத்தளத்திலே தேவ நியமங்களை மீறிநடக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு ஆகவே என் எஜமான் சாத்தான் என்று வாழ முடியாது. ஒரு கிறிஸ்தவன், தன் பெற்றோருக்கு பிள்ளையாகவும், சகோதரர்களுக்கு சகோதரனாகவும், தன் மனைவிக்கு கணவனாகவும், தன் பிள்ளைகளுக்கு தகப்பனாகவும், சபையிலே போதகராகவும், நாட்டிற்கு பிரஜையாகவும் இருக்கலாம். ஆனால் தேவனுடைய பார்வையிலே அவன் ஒரு தனி மனிதன். தேவன் மனிதர்கள் யாவரையும் அன்பு செய்து, தம்முடைய கிருபையை யாவர் மேலும் பொழிகின்றார். ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதையே அவர் விரும்புகின்றார். ஆனால் இந்த உலகத்தின் போக்கையும், அதன் வழிகளையும் அவர் அங்கீகரிப்பவர் அல்ல. ஒரு வேலைத் தளத்தில் அதிகாரியாக இருந்தால், அங்குள்ள வேலையாட்கள் '**யாவருக்கும்**' ஆதரவாக நியாயம் செய்ய வேண்டும். ஆனால் தீமையான வழிகளை அங்கீகரிப்பவராகவும், தேவ நியமங்களுக்கு விரோதமான வழிகளுக்கு உடந்தையாகவும் இருக்க முடியாது. தேவனிடத்தில் அநீதி இல்லை! எனவே பூலோக எஜமான்கள் பரலோக எஜமானனாகிய இயேசுவுக்கு விரோதமான அநீதியான செய்கைகளுக்கு உடன்படக்கூடாது.

**லூக்கா 12:4-5**

இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது.

**ஜெபம்**: என் எஜமானனாகிய கர்த்தாவே, வீட்டிலும் வெளியிலும் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாதபடி, எந்த நிலையிலும், எப்போதும், உம்முடைய பிள்ளையாய் வாழும் மேன்மையை உணர்ந்து கொள்ளும் இருதயத்தைத் தாரும்.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆவியோடும் உண்மையோடும்

தேவனே, அன்பு என்னும் அறுக்கமுடியாத கயிற்றினால், எங்கள் ஐக்கியத்தை ஒன்றாய் கட்டும் என்று ஒரு பாடல் வரி அமைக்கப்பட்டிருக்கின்றது. ஐக்கியமும் ஒருமைப்பாடும் உள்ள கூட்டுறவை உடைத்துப் போடுவது மிகவும் கடினம். அது குடும்பமாக இருக்கலாம் அல்லது நண்பர்களாக இருக்கலாம் அல்லது சமூக கூட்டுறவுகளாக இருக்கலாம், அல்லது ஒரு இராணுவமாக இருக்கலாம், அவர்களின் தனித்த பலத்தைவிட அவர்கள் சேர்ந்து ஒற்றுமையாக செயற்படும்போது, அவர்களின் பலத்தை தணிக்க முடியாது. அதற்கு மேலாக, சபை ஐக்கியத்திலே, இயேசுவின் நாமத்தினாலே, தேவ அன்பில் கட்டப்படும் போது, எந்த பிசாசின் சக்திகளும் அதை கண்டு நடுநடுங்கும். இன்று சிலர் மரங்களுக்கு கீழும், தெரு ஓரங்களிலும், சிறைச்சாலைகளிலும், வைத்தியசாலைகளிலும், தேவனை ஆராதிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள். வேறு சிலர் குடிசைகளிலும், கொட்டில்களிலும், வீடுகளிலும், பாடசாலை வகுப்பறைகளிலும், திறந்த அரங்கிலும், சபைக் கட்டிடங்களிலும் தங்கள் தங்கள் வசதிக்கேற்ப தேவனை ஆராதித்து வருகின்றார்கள். சில இடங்களிலே ஒரு சிலரும், வேறு இடங்களிலே நூற்றுக் கணக்கானோர், ஆயிரக்கணக்கானோர் கூடி ஆராதிக்கின்றார்கள். தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுகின்ற யாவரும் ஒருநாள் விலை மதிக்கமுடியாத பரலோகத்திலே ஒன்றாய் கூடி ஆராதிப்பார்கள். தேவனை எங்கே ஆராதிக்க வேண்டும் என்ற விவாதங்களிலே சிக்கிக் கொள்ளாதிருங்கள். சபை கூடுதலை விட்டு விடாதிருங்கள். எங்கிருந்தாலும் தேவனை ஆவியோடும் உண்மையோடு, ஆராதிக்க பழகிக் கொள்ளுங்கள்.

**யோவான் 4:24**

தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்.

**ஜெபம்**: வழிநடத்தும் தேவனே, பக்திவிருத்தியல்லாத தர்க்கங்களையும் ஆராய்ச்சிகளையும் விட்டு, இயேசுவின் சாயலில் வளர்ந்து, தேவ சித்தத்தை என் வாழ்க்கையில் நிறைவேற்ற கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெருக விதைப்போம்

குடும்பத்தில் சமாதானம். நல்ல உத்தியோகம், தேவைக்கு அதிகமான வருமானம். தேவனுக்கு பயந்த மனைவி பிள்ளைகள். நல்ல நண்பர்கள், இப்படியாக ஒரு மனிதனின் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. அவனைச் சுற்றியிருந்த அவன் உடன் சகோதரர்களின் வாழ்வில் ஏதோ ஒரு அழுத்தம் இருந்து கொண்டிருந்தது. அமரிக்கையாக வாழுகின்ற மனிதன், தன் வாழ்வில் வந்த சமாதானத்தை தந்த தேவனையும், தன் வாழ்வின் நோக்கத்தையும் மறந்துவிடக்கூடாது. சுற்றியிருப்பவர்களின் வாழ்வை குறித்து விமர்சிக்கக்கூடாது. மாறாக, மற்றவர்களின் வாழ்வில் சமாதானமானது பெருகும்படி பிரயாசப்பட வேண்டும். இந்த பிரயாசத்தில்: நேரமும் பொருளாதாரமும் அடங்கும். நேரமெடுத்து மற்றவர்களுக்காக ஜெபிக்க வேண்டும், மற்றவர்களுக்கு சரீர உதவி செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். பொருளாதார ரீதியிலும், தானும், தன் பிள்ளைகளும், பிள்ளைகளின் எதிர்காலமும் என்று வாழாமல், தேவன் கொடுத்த வளங்களை தாராளமாக பகிர்ந்து கொடுக்க வேண்டும். சாலமோன் ராஜாவிற்கு தேவன் சகல ஆசீர்வாதங்களையும் கொடுத்தார். ஆனால் அவன் மரித்தபின்பு, ஜனங்கள் அவனுடைய மகனை நோக்கி: உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார் இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் இலகுவாக்கும் அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள். தேவ ஆசீர்வாதங்கள் எங்கள் சுயநலதிற்காக கொடுக்கப்பட்டவைகள் அல்ல. நாங்கள் சந்தோஷமாக வாழ வேண்டும், அதே நேரத்திலே தேவனுடைய சித்தத்தை அறிந்தவர்களாய் நல்ல உக்கிராணக்காரணாய் செயற்பட வேண்டும். எங்கள் குடியிருப்பு இந்த பூலோகத்தின் ராஜ்யத்திற்குரியதல்ல.

**2 கொரிந்தியர் 9:6**

சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.

**ஜெபம்**: பரலோக தந்தையே, பரலோகத்திலே அழியாத பலன்களை அறுக்கும்படியாக, இப்பூலோகத்திலே பெருக விதைக்கும்படி, பிரகாசமுள்ள மனக் கண்களைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேறினவர்களாகும்படிக்கு...

தங்கள் சிறிய விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அதில் பிரயாணம் செய்தவர்கள், காடும் மலை சார்ந்த பாதை வழி யாக கடந்து அடுத்த கிராமத்திற்கு கடந்து செல்ல வேண்டியதாயிற்று. அவர்கள் ஒரு சிறு குழுவாக இருந்தபோது, அவரவர் தன் தன் வழி யில் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டியதாயிற்று, காட்டு மிருகங்களும், விஷம் உள்ள சர்ப்பங் களும் உள்ள அடர்ந்த காடு. அப்படி யாக பிரயாணம் செய்யும் போது, அதில் ஒருவன், எப்போதும், மற்றவ னின் நடையையும், மற்றவனின் வழி யையும் விமர்சிப்பதில் தன் நேரத்தை செலவிடுகின்றவனாக இருந்ததால், அவன் தன் நடையை மறந்து தனக்கு முன் வரும் ஆபத்தை உணராதிருந் தான். பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தை என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாக இருக்கின்றது. அந்த வார்த் தைகள், முதலாவதாக என்னுடைய வாழ்கைக்கு தேவை என்பதை ஒரு போதும் மறந்து விடக்கூடாது. பரிசுத்த வேதாகமத்தை கற்றுக் கொள்ளும் போது, அதை மற்றவனுக்கு சொல்லிக் கொடுக்கும்படி யாய் கற்றுக் கொள்ளாமல், முதலாவதாக அந்த வார்த்தைகள் என் ஆத்துமாவிற்கு உணவு என்றும், என்னுடைய பரலோக யாத்தி ரைக்கு தேவனால் அருளப்பட்ட விளக்கு ஏ்ன்பதையும் உணர்ந்து என் நடையை நான் காத்துக் கொள்ள வேண்டும். ஒருவன் உலகமெல் லாவற்றையும் ஆதாயப்படுத்தி தன் ஆத்துமாவிற்கு கேடு விளைவிப்ப வனாக இருந்தால், அதனால் அவனுக்கு பலன் என்ன? என்று இயேசு கூறியிருக்கின்றார். உபதேசமும், கடிந்துகொள்ளுதலும் சீர்திருத்தலும், நீதியைப் படிப்பிக்குதலும் என்னுடைய சொந்த வாழ்க்கையிலே ஆரம்பிக்கும் போது அதனால் பெரிதான நன்மை எனக்கும் என்னை சூழ இருப்பவர்களுக்கும் உண்டாகும்.

**2 தீமோத்தேயு 3:16**

..தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி,

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, உம்முடைய வாழ்வு தரும் வார்த்தைகளை கேட்டு, இருதயத்தில் பதித்து வைத்து, அதன்படி நான் நடக்க என்னை வழிநடத்தும்.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிறருக்கு நன்மையுண்டாகும்படி

தேவனுடைய வார்த்தையின்படி என்னுடைய நடையை காத்துக் கொள்ளுவதால் நான் சுயநலவாதியாக இருப்பேனோ? அதனால் மற்றவர்களுக்கு உண்டாகும் பெரிதான நன்மை என்ன? தேவனுடைய வார்த்தையை தங்கள் வாழ்வில் மனதாரக் கைகொள்ளுகிறவர்கள், பொதுநலம் கருதி வாழ்பவர்கள். உதாரணமாக, உன் தேவனாகிய கர்த்தரை நேசி, உன் பிறனை நேசி என்ற அடிப்படையான கட்டளைகளை தேவன் கூறியிருக்கின்றார். தேவனை உண்மையாக நேசிக்கின்றவன், அவருடைய கட்டளையின்படி, தான் பிறனில் கபடற்ற தூய அன்பைக் காட்டுவான். தேவனுக்கு பயந்து தன் வழியை காத்துக் கொள்பவனின் உள்ளத்திலே பெருமை, பகை, வன்மம், பொறாமை போன்றவைகள் குடி கொள்ளாது. அதனால் மற்றவர்களின் உயர்வில் மகிழ்ச்சியடைவான். அவன் தேவனுடைய புத்திரனாக இருப்பதால் எப்போதும் சமாதானம் செய்வான். இப்படியாக இயேசுவின் சாயல் இவனில் அதிகமதிகமாக உருவாகிக் கொண்டு போவதால், இவன் தேவனுடைய நன்மைகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகின்றான். இவன் கிரியைகளைக் கண்டு மற்றவர்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள். ஆனால் நான் வேதத்தை மனதார கைக்கொள்ளாமல், மற்றவர்களுக்கு உபதேசிப்பவனாகவும், மற்றவர்களை கடிந்து கொள்பவனாகவும், நீதியை மற்றவர்கள் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துபவனாகவும், மற்றவர்கள் வாழ்வை சீர் செய்ய பார்க்கின்றவனாகவும் மாத்திரம் இருந்தால், நான் சுயநீதி நிறைந்த சுயநலமுள்ள மாயக்காரன் போல ஆகிவிடுவேன். மற்றவர்களுக்கு உபதேசிப்பதை, தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல், அதற்கு முரணாக நடப்பவர்களைப் பார்த்து இயேசு மாயக்காரர் என்று அழைத்தார். இந்த பாவ இருள் நிறைந்த உலகத்திலே எங்கள் வழியாக இயேசுவின் திவ்விய ஒளி உலகத்திலே பிரகாசிக்கட்டும்

**மத்தேயு 5:16**

உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, உம்முடைய வார்த்தையின்படி என் வாழ்வை காத்துக் கொள்வதினால், மற்றவர்களுக்கு நன்மையாக விளங்க என்னை வழிநடத்திச் செல்லும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் **'உள்ளான மனிதன்'** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற்றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்த பிரதியை பெற்றுக்கொள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள்ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடின், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, கொழும்பில் இந்த சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுகிறவர்களின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு தேவனை அறியாதவர்களுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.** (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரையும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படியாய் அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

---

---

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

---

---

---

---

(தொலை பேசி இலக்கம், மின் அஞ்சல் முகவரி உங்களிடம் இருந்தால் அவைகளை குறிப்பிடவும்)

**தொலைபேசி TELEPHONE:**

---

**மின் அஞ்சல் E-MAIL:**

---

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

K. Indrajit
72/6 Edirisinghe Road,
Mirihana, Nugegoda

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

*FOR MORE INFO VISIT OUR WEBSITE*

**www.gtachurchnet.ca**

***Sunday Worship Service***
***at 10:00 AM***

***Sunday school (Ages 4 - 18)***
***at 9:00 AM***

***Tuesday Prayer and Worship***
***at 7:30 PM***

***Thursday Ladies Prayer***
***at 8:30AM***

***2nd & 4th Fridays***
***Deliverance Prayer at 7:00 PM***

***2nd Saturday***
***Fasting and Prayers at 10:00 AM***

210 SILVER STAR BLVD., UNIT 807, SCARBOROUGH, ON M1V 5J9

**www.gtachurchnet.ca** **416.613.2909**